# மல்லிகை

ஆசிரியர் : டொமினிக் ஜீவா

73/2

பெப்ரவரி
1973
(2)



விலை 50 சதம்

தலை இலக்கிய மாத இ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏ. சபூர் அஹமது.

'ஆடுதல் பாடுதல் சித்திரம் - கவி
யாதிய இணைய கலைகளில் - உள்ளம்
ஈடுபட்டென்றும் நடப்பவர் - பிறர்
ஈனநிலை கண்டு துள்ளுவார்'

மல்லிகை

கொடி 8 மலர் 58

பிப்ரவரி 1973

## உங்களுடன் ஒரு வார்த்தை

பல்வேறு சுவை பொதிந்த துணுக்குகளை — தரமான இலக்கியக் கடிதங்களை — விவாதத்துக்குரிய பிரச்சினைக் கருத்துக்களை ஒவ்வொரு இதழுக்கும் எதிர்பார்க்கின்றேன்.

எத்தனையோ நண்பர்கள் நேரில் பல கருத்துக்களைச் சொல்கின்றனர். வேறு சிலர் கருத்துக்கள் பல சொல்ல இருந்தும் மறந்து விடுகின்றனர். அல்லது சோம்பேறித் தனத்தினால் எழுத விரும்புவதில்லை.

வேறு சிலரோ நண்பர்களுடன் பேச்சில் சண்டப் பிரசண்டம் செய்வார்கள். தாம் சொல்லும் கருத்துக்களைப் பொறுப்பாக ஒழுங்குபடுத்தி எழுத்தில் போடக் கூச்சப்படுகின்றனர். இன்னும் தெளிவாகச் சொல்லப் போனால், தாழ்வு மனப்பான்மையினால் தாக்கப்பட்டு எழுதப் பயப்படுகின்றனர்.

சகலரும் தமது கருத்துக்களை — மல்லிகையின் குறை நிறைகள் உட்பட — தெளிவாக எழுதுவது அவர்களது இலக்கியக் கடமை என்பதை மட்டு நினைவூட்டுகின்றோம்.

— ஆசிரியர்

மணக்கும் 'மல்லிகை'
கதை, பெயர்,
கவிதை, கட்டுரை,
கருத்து..
எல்லாம் ஆக்கியோர்
தனித்துவம்;
பொறுப்பும் அவரே;

அலுவலகம்:
234-ஏ, கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம் (இலங்கை)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முன்னேற்றம்

அன்பு ஜவஹர்ஷா

'விஞ்ஞான யுகம்!
வெற்றிகள்
மாற்றங்கள்
புதுமைகள்

இங்கே
மூலை முடுக்கெல்லாம்
மணமேடை காணப்
பகல் கனவு கண்டு — நடைப்
பிணமாக வாழும் குமர்கள்.

விலைவாசி ஏற்றம்
நிலையற்ற வருவாய்
இவற்றால்
ஏழைகள் நிலையோ
கீழே—
மிகக் கீழே!

அதோ
மீண்டும் மீண்டும்
அதே குரல்

'விஞ்ஞான யுகம்
வெற்றிகள்
மாற்றங்கள்
புதுமைகள்... ......
சாதனைகள்—
யாருக்கு...............?

---

## நிதி உதவிய நெஞ்சங்கள்

| | |
|---|---|
| முருகையன் | — 18-00 |
| ஏ. எச். ஏ. இமாடுடீன்<br>சூரியாகவெல, ஜோனகபுர,<br>திக்வெல்லை. | — 15-00 |
| ஜே. பாலசண்முகதேவன்<br>ரயர் கூட்டுத்தாபனம்<br>களனி. | — 10-00 |
| திக்வெல்லை கமால் | — 10-00 |
| மகேஷ் | — 10-00 |
| செல்வி ராஜம் தேவராஜன் | — 3-00 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மல்லிகை

# உபதேசம் நல்லது—

## செயல் அதைவிடச் சிறந்தது!

இலங்கைப் புத்தக அபிவிருத்திக் கவுன்ஸிலின் கருத்தரங்கு சென்ற மாதம் கொழும்பில் இரண்டு நாட்கள் நடைபெற்றன.

எழுத்தாளர்கள், பதிப்பாளர், அரசாங்க அதிகாரிகள், வெளியீட்டாளர்கள் ஆகியோர் இரண்டு நாட்களாக நடந்த இந்தக் கருத்தரங்கில் கலந்து கொண்டதுடன், பல ஆக்கபூர்வமான கருத்துக்களைச் சபையின் முன் சொன்னுர்கள்.

கரையில் நின்று, 'காலை இப்படி ஆட்டு, கையை இப்படி வீசு, முகத்தை இப்படி உயர்த்து' என்று நீச்சல் பழக்குபவனை விட, தண்ணீரில் இறங்கி கையையும் காலையும் உதைத்து, மூச்சுத் திணறி இரண்டு மூன்று வாய் அழுக்குத் தண்ணீரைக் குடித்து, திக்குமுக்காடி, துணிந்து நீச்சல் பழகுபவன்தான் முடிவில் அத்துறையில் தாக்குப் பிடிப்பதுடன் அனுபவ சாத்தியமான படிப்பினைகளைக் கற்றுக் கொள்ளுகின்றவன் ஆவான்.

நாம் என்னதான் அற்புதமான கருத்துக்களை வெறும் பேச்சில் சொன்னுலும் அது காற்றுடன் போகுமே தவிர நடைமுறைக்கு வராத ஒரு துர்ப்பாக்கிய நிலையில்தான் நமது நாடு இன்று இருக்கின்றது.

ஈழத்துச் சஞ்சிகைகள் சம்பந்தமான பல ஆக்கபூர்வமான கருத்துக்கள் இன்று நடைமுறையில் இல்லாமல் 'வெறும் பரபரப்பு நாடக' மாகப் போவதற்கும் இந்த அனுபவ சாத்தியமற்ற கருத்துக்கள்தான் காரணமோ என நாம் இப்பொழுது சந்தேகப் படுகின்ருேம்.

புத்தக அபிவிருத்தியில் நமது நாடு மிகமிகப் பின் தங்கியுள்ளது. எழுத்தாளர்களின் படைப்புக்கள் நூலுருவில் வெளிவருவதும் விற்பதும் மிகக் குறைவு எனக் கூறப்பட்டது. உண்மை.

இதை எப்படி நாம் மாற்றியமைக்கலாம்?

கேரளத்தில் வாழும் எழுத்தாளர்கள் சுமார் இருபது ஆண்டுகளுக்கு முன்னர் சிறிய அமைப்பில் ஆரம்பித்த எழுத்தாளர் கூட்டுறவுப் பதிப்பகம் இன்று மலையாளம் பூராவும் கிளைவிட்டுப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படர்ந்துள்ளது. இது மாத்திரமல்ல, எழுத்தாளர்கள் 'ராயல்கு'வை ஆசியாவிலேயே கேரளத்தில்தான் அதிகமாகப் பெறுகின்றனர் என்ற பெருமையையும் இந்தப் பதிப்பகம் பெற்றுத் தந்துள்ளது.

இந்த நடைமுறை அனுபவங்களை நாம் தெளிவாகப் புரிவதுடன் அவர்களது ஆலோசனைகளையும் நாம் பெற்றுக் கொள்ள வேண்டும்.

'பட்டினங்களைவிட, கிராமங்களில் இன்று பணப் புழக்கம் அதிகம். செலவளிக்க வகை தெரியாமல் கண்டபடி பணத்தைத் தீய வழிகளில் மண்ணடிக்கின்றனர். இக் கிராம மக்களை நாம் நமது புத்தகங்களுடன் அணுக வேண்டும்'

முற்று முழுதும் சரி.

இதை யார் செய்வது?

இலக்கியத் துறையைச் சேர்ந்தவர்கள், பதிப்பகத்தார், அரசாங்க ஊழியர்கள், கல்வித் திணைக்களத்தைச் சேர்ந்தோர் ஆகிய சகலரும் திட்டமிட்டு இந்தக் கைங்கரியத்தில் இறங்க வேண்டும்.

இது நமது தேசியக் கடமையுங்கூட —

இதைவிட்டு, வெறும் உபதேசத்தில் நாம் நமது நேரத்தைச் செலவிடுவோமானால், காற்றுடன் சண்டை போட்டதைத் தவிர, நமக்கு வேண்டிய அநுகூலத்தைப் பெற்றுக் கொள்ளத் தவறி விடுவோம்.

எல்லாரையும் விட, எழுத்தாளர்களுக்கு புத்தக அபிவிருத்தியில் பெரும் பங்குண்டு. ஏனெனில் படைப்பாளிகளின் புத்தகங்கள் நூலுருப் பெற்று மக்கள் மத்தியில் பரவினால்தான் எழுத்தாளனுக்குப் பெருமை. அதனால் நமது நாட்டிற்கும் மதிப்பு.

எனவே, ஓர் ஆண்டில் ஒரு வாரத்தை தனதுக்கி, அந்த வாரத்தை படைப்பாளிகளின் புத்தக விற்பனை வாரமாக்கி, எழுத்தாளர்கள் சகலரும் ஒன்று சேர்ந்து கிராமம் கிராமமாக விற்பனைக்குச் சென்றால், பிரசாரம் மாத்திரமல்ல, நல்ல புத்தகங்களை நமது கிராமங்களுக்கு அறிமுகமாக்குவதுடன், அதை எழுதியவர்கள் தேவதைகளல்ல, தங்களின் புத்திரர்களே என்ற பச்சை உண்மையையும் அவர்களுக்குப் புரிய வைக்கமுடியும்.

படைப்பாளிகளுக்கும் தரமான வாசகர்களுக்கும் இடையேயுள்ள உறவு மிக நெருக்கமாக வேண்டும். ரஸிகன் அந்தச் சிருஷ்டியாளர்களைப் பற்றிப் பூரணமாகப் புரிந்துகொள்ள உதவும்.

சினிமா நடிகன் மக்கள் மத்தியில் அடிக்கடி காட்சிதரக் கூடாது. ஏனென்றால் அவன் மீது கற்பிக்கப்பட்டுள்ள தனிக்கவர்ச்சி குறைந்துவிடும். ஆனால் எழுத்தாளன் சனங்களை விட்டுத் தூரப் போய் விடக்கூடாது. தூர விலக விலக, மக்களின் ஆத்மார்த்திக அனுபவங்களிலிருந்து எழுத்தாளன் துண்டிக்கப்பட்டு விடுவான். மக்களும் அவனது ஞாபகத்தை மறந்து விடுவார்கள்.

ஆயிரம் டன் உபதேசத்தை விட, ஒரு குன்றுமணி அளவு செய்கை மேல்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுஹேர் ஹமீட்

அட்டைப் படம்

# முதன் முதலில் சந்தித்தேன்



சீ. ஏ. ரகுநாதன்

1968-ம் ஆண்டின் பிற்பகுதி.

சரஸ்வதி மண்டபம்.

கொழும்புத் தமிழர் கூட்டம், நாடகம் பார்கும் ஒரே இடம்.

யார் நாடகம் போட்டாலும் தவருது பணம் கொடுத்து நாடகம் பார்ப்பது எனது சுபாவம். அன்றும் என்னை அழைத்துச் சென்றது.

''அவளைக் கொண்றவள் நீ'' துப்பறியும் நாடகம்.

துப்புக்கெட்ட நாடகங்கள் பலவற்றை பொறுமையுடன் சீழ்க்காய் அடிக்காமல் பார்த்த பெருமையும் நான் நாடகத் துறையில் ஈடுபட்ட 25 ஆண்டுகளாக நான் எனக்குள் எண்ணிக்கொண்டிருக்கும் பெருமைகளுள் ஒன்று.

சீழ்க்காய் அடிக்கத் தெரியாததுதான் காரணமோ?

2 ரூபா ஆசனத்தில் அமர்ந்திருந்ததாக என் ஞாபகம்.

நான் பணக்காரனல்ல.

நாடகம் ஆரம்பமாகியது.

யாருமே எனக்குத் தெரிந்தவர்களல்ல.

கண்கள் மேடையை விட்டு அகலவே மறுத்து விட்டன.

புலன் அடங்கி பக்கங்களில் இருக்கும் அழகுத் தோற்றங்கள் கூட மனதை இழுக்கச் சக்தியற்று மேடையே சகலமும்.

இலங்கையின் தலைசிறந்த நடிகர்களுள் ஒருவராகக் கணிக்கக் கூடிய கே. ஏ. ஜவாகரின் கணீர்க் குரல்.

(கலைஞர்களின் பெயர்களைப் பிற்பாடு அறிந்து கொண்டேன்)

சரஸ்வதி மண்டபம் திறந்த வெளி அரங்கில்கூட வியாபிக்கும் நல்ல குரல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிஸிஸ் கணேஷ்
யேஸ் இன்ஸ்பெக்டர்.
இன்ஸ்பெக்டர் ஜவாகருக்குச் சவால்!
அப்படி அற்புதமாகநடித்தவர் செல்வி ஜெயந்தி அப்பாக்குட்டி
என்ன அழகாக நடிகர்கள் பயிற்றப்பட்டுள்ளார்கள்!
என்ன மேடை ஒழுங்கு!
என்ன அழகான ஒளி அமைப்பு உத்திகள்!

அதிக வசனம் பேசியே விளங்க வைக்க வேண்டிய துப்பறியும் நாடகம்.

கே. எம். சுபியானின் ஆழமான வசன அமைப்பு
சுவை கெடாது அமைத்து விட்டாரே
யாரப்பா இந்த இயக்குனர்!
நாடகம் முடிந்தது.

நல்ல நாடகமாக இருந்தால் நானுகவே மேடைக்குள்போய் பாராட்டுவது எனது சுபாவங்களில் பிறிதொன்று.

நடிகர்களைப் பாராட்டி விட்டேன் — இயக்குனர் எங்கே?
அதோ……… முக்கால்வாசிச் சேட் வெளியே தொங்குகிறது
கால்களில் அணியில்லை
தலைமுடி அலைந்து ஓய்ந்து கிடக்கிறது.
உடலில் களைப்பு. முகத்தில் ஆழ்ந்த நிம்மதி!
பரந்த பாவங்களை வெளிப்படுத்தும் முகம்
'அற்புதமான நாடகம்' எனது பாராட்டு.
'அப்படியா, தாங்ஸ்!' அடக்கம்.
பேசுகிறோம்.

நாடகத்தின் பல அம்சங்களைத் தொட்டுக்காட்டிப் பாராட்டு கிறேன்.

புன்னகை மாருத முகம்.
இடையே பலர் பாராட்டிக் கொண்டிருக்கிருர்கள்.
அவர்களுக்கும் அதே புன்னகையும் நன்றியும்.
மேடைப் பிரச்சினைகள்.
யார் மேலும் எதற்கும் சீற்றம் கொள்ளாத இயல்பு.
எனது நாடகமொன்றை இயக்கித்தர வேண்டும்.

திறமையுள்ள கலைஞர்களுக்கு நான் கொடுக்கக்கூடிய கௌரவம் இதுதான்.

'சந்தோஷமாக. ஆனுல் ஒரு நிபந்தனை
நாடகப் பிரதியை நாடகம் எழுதுபவருடன்
பேசி நானே அமைக்க வேண்டும்.

அப்பொழுதுதானே உங்கள் 'அளிக்கும்' திறனை அது பூரணப் படுத்தும். தனித்துவத்தை முழுமையாக உணர்த்தும். நடிகர்களை நானே தீர்மானிப்பேன்!'

'நிச்சயமாக நான் எதிலும் தலையிட மாட்டேன்'
'செய்வோம்………'
கைகளைப் பிணைத்துக் கொள்கிறோம்.
அவருக்குப் பல வேலைகள்.
இரவு படுத்த மறுநிமிடமே தூங்கிவிடும் சுபாவம் எனக்கு.
அன்று நான் பார்த்த நாடகம், நான் சந்தித்த அருமை நண்பர்,
அறிவு ஜொலிக்கும் முகம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆட்களை அளந்து பேசும் ஆழம். கலைபற்றிய முழு ஈடுபாடு.
வெற்றியல்ல நிதானம்
கம்பீரமான தோற்றம்
பண்பும் வசதியும் மிக்க குடும்பத்தில் பிறந்த நல்ல சூழ்நிலையில் வளர்ந்த முதிர்ச்சி
23 வயதுதான் அப்போது. ஆனால் 30 வயதுத் தோற்றம். மனம் கற்பனை சக்தி கொண்டவர்களில் பலர் இப்படித்தானோ?
சுஹேர் ஹமீட்.
ஆமாம்.
இந்த நாடகத்தை நான் பார்க்கும் முன்பே பல நாடகங்களை அவர் அளித்துள்ளார்.
'பொம்மலாட்டம்'
'ஒரு இரவில் தமிழ் நாடக சரித்திரத்தையே மாற்றிவிட்ட நாடகம்'
பத்திரிகைகள், விமர்சகர்கள் ஏகோபித்த பாராட்டு
(விமர்சகர்களென்றால் தாங்களே எழுதி நண்பர்கள் பேரில் போடுபவர்களல்ல)
பொது மக்களுக்குத் திகைப்பு!
'தமிழ் நாடகங்கள் இப்படி நன்றாக அமையுமா?? என்று!
பொம்மலாட்டத்திற்குக் கிடைத்த விமர்சனங்களில் இவை சில
நான் கண்டவை — கேட்டவை.
அவரும் நானும் — 'தேரோட்டி மகன்' — 'கொலைகாரன்' 'பாவிகள்' 'வாடகைக்கு அறை' 'பச்சைக்கிளியே பழங்கொண்டா' 'வேதாளம் சொன்ன கதை'
வேதாளம் சொன்ன கதை' கவிதை நாடகம்.
ஆம் அவரின் வெற்றிக்கு மற்றுமோர் புகழ் ஆரம்.
'கவிதை நாடகம்' பாமரனுக்குப் புரியுமா? புரியவைத்தார்.
மலையகத்தில் பாராட்டு
யாழ்ப்பாணத்தில் புகழ்மாலை. கொழும்பில் வாழ்த்தொலிகள்
'என் கவிதைகள் அழியவில்லை' அம்பி
'உங்களுக்கு நான் ஒரு நாடகம் எழுதித்தருவேன்' மஹாகவி
'நீங்கள் கேட்ட நாடகம் இதோ'
'தொடர்ந்து உற்சாகமாக நடத்துங்கள்' முருகையன்
'அவர்கள் அனுபவசாலிகள்' இரத்தினம்
'தமிழகத்தில்கூட ஆத்ம திருப்திக்குத்தான் கவிதை நாடகம் போட்டார்கள்' பலர்
'என்னய்சே பேயும், பிசாசும்' 'எதுவும் செய்யாதவர்கள்' முற்போக்குக் கொள்கைகள் இல்லாவிட்டாலும் நல்ல நாடகம் தான். நல்ல படைப்பு' ஒரு முற்போக்குவாதி.
பாராட்டுக்கள் — புகழ்மாலைகள் — வாழ்த்தொலிகள்!
இவர்தான் சுஹேர் ஹமீட்
கலைக்குத் தன்னை அர்ப்பணித்தவர். கலையை முறையாகப் பயின்றவர்.
பரீட்சார்த்தமாக பலவற்றைச் செய்து பார்த்து வெற்றியும் கண்டவர்.
சாதனைகள் பல செய்தவர். செய்ய இருப்பவர்.
ஆகவே என்றாவது மீண்டும் தொடரப்பட வேண்டிய விஷயம் தானே இது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெருங்கி வருகிறேன்

கல்முனைப் பூபால்

நிலவே
உன்னை நெருங்கி வருகிறேன்!

இந்தப் பூமியை
அழகு படுத்தி;
பொனரு இளமைப் புதுமை சமைத்து;
இந்தப் பூமியின் எழிலுரு வாக
நீயிருந் தாட்சி நிறுவு கின்ருய்!

உன்னை நெருங்கி
உனது தரையில்
என் இரு பாதம் பதிக்க நினைக்கிறேன்!
உன்னை நெருங்கி
உன்னெடும் கலக்க
என்னை அங்கே எடுத்து வருகி றேன்!

நிலவே,
உனது சுடுதரை மீது
குளிர்ந்த என் உடலம்
கிடத்த நினைக்கிறேன்!

உன்னைச் சிலபேர் குளிரெனச் சொல்வர்;
உன்னைச் சிலபேர் கொடுநெருப் பென்பார்;

உன்னை அவர்கள் எப்படி உரைப்பினும்.........
என்னுணர் வெல்லாம் இனிய உனது
வெண்தரை மடியில் 'அறிதுயில்' கொள்ள
உரிமை யோடும் துடித்திருக் கின்றன!

ஏனெனில்.........
உன்னை நீயே அறியா வண்ணம்
உட்சுழி யோடி உன்னைத் தெளிந்தேன்!

நீ ஒரு இனிமை நிறைந்த பண்டம்!
நீயே எல்லாம் நிறைந்த புத்தகம்!

ஆகையால்
உன்னை நன்ருய்ப் படிக்க நினைக்கிறேன்!

நிலவே
உன்னை நெருங்கி வருகிறேன்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு மாடப் புறுவின் மரணம்

மு. கனகராசன்

இருட்டு வந்தது. சண்முகத்தின் நித்திரையைக் கொள்ளையிட்டது. நிம்மதியையும் வாரிக்கொண்டது. அவன் புரண்டுகொண்டிருந்தான்.

நேற்றுவரை கதைகளின் சாம்ராஜ்யமாகவிருந்த அதே கட்டில்தான்.

தாஜ்மஹால் பொலு பொலுவென இடிந்து, தூளெனத் தரைமட்டமாகியது சண்முகத்துக்குள்!

'சுகந்தா! அடி சுகந்தா! எத்தனை நீண்ட வருடங்களடி? இத்தனை காலமும், ஒவ்வொரு பொழுதும் நீ எனக்குள்ளேயே வாழ்ந்திருக்கிறுயடி! உன்னை நினைக்காத ஒரு நாள் எனக்கு வந்ததே இல்லையேடி......'

இனி 'ரிட்ஸ்', 'லிடோ', 'ரியோ', 'லிபர்டி', 'சவோய்', 'சபயர்' எல்லாவற்றையும் காணும்போது அவனது நெஞ்சு கொதிக்கும். சும்மா இருக்க இயலாதுதான். தியேட்டரின் திரை என்ற ஜடமல்ல அவன்.

பரிசுகள்! 'கேஷ்மீர்', 'பட்டர் நைலோன்', 'நைலெக்ஸ் என்றுதான் எத்தனையெத்தனை

'சண்! நீங்கள் தந்த குங்குமத்தை, பவுடரை, பெர்பியூமை, கொலோனையெல்லாம் கொண்டு அலங்கரித்து வரும் போது அந்த ரம்யமான வாசனையில் நீங்களே என்னைத் தழுவி வருகிறீர்கள் சண்!' — சுகந்தி சொன்னதுதான். அந்தப் பிரேமையில் திளைத்ததுண்டு.

அவன் எழுந்து அமர்ந்தான்.

கந்தோர் விட்டதும் பஸ் நிலையத்தில் வந்து காத்திருப்பான். ஆகக் கூடினுல் பதினைந்து நிமிடம்; அவள் வந்துவிடுவாள். அவள் முந்திவிட்டால் அவனுக்காக நின்றுள்.

சந்தித்தபிறகு 'யோகட்', 'செலர்ஸ்', 'ஐஸ் ச்சொக்' கடற்கரை, அலைகளின் தூறல்...

மீண்டும் புரள, கட்டில் கிறீச்சிட்டு அழுதது.

'மானஸ மைன வரு

மதுரம் நுள்ளில் தரு......'

எங்கோ ஒரு கடற்கரையில் பரிக்குட்டியின் குரல்.

காலையிலேயே ஸ்டெல்லாவுக்கு அழைப்புவிட்டு, 'இன்று கொஞ்சம் பிந்தித்தான் வரும்' என்று வீட்டில் 'சாட்டு' சொல்லிவிட்டு வந்த நாட்களிலென்ருல், மூன்றரை மணி வெயிலுக்காக ஜெல்லி நிறைந்த 'ப்ருட்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'செலற்' ஐ சுவைத்தபின், ஒரு தியேட்டரின் இருளில் நான்கு இதழ்கள் இரண்டாகி, இறுக்கத்தில் ஒருவராகத் துடித்தது—

இட்போது... இரத்த அணுக்களெல்லாம் துடித்தன.

'சண்முகம்! சண்முகம்!'— சின்னம்மா பலதடவைகள் கூப்பிட்டுவிட்டாள் சாப்பிடுவதற்கு.

'என் வயிறே உலையாகியிருக்கிறதே' என்று சொல்ல நினைத்தான்; பெருமூச்சோடு நிறுத்திக் கொண்டான்.

சுவர்க் கடிகாரத்தின் டிக் டிக்!

'சண்முகம்! சண்முகம்!'

'சேச்சேச்சேச்சே! எனக்கு வேண்டாம்! வேண்டாம்!'

கோபத்தோடு கத்தினான். தலையணையை ஓங்கிக் குத்தினான். ஸ்ரூலிலிருந்த கிளாஸ் கைபட்டு விழுந்து, 'இன்றோடு விட்டேன்' என்பதாகக் கலீரிட்டுக்கொண்டு கண்ணாடி களாயிற்று.

'சண்முகத்துக்கு என்ன...? சுகயீனமோ?' உள்ளே சித்தப்பா கேட்டார். அவருக்குப் பதிலளிக்காமலே ஓடோடி வந்தாள் சின்னம்மா.

அவன் எழுந்து உட்கார்ந்தான். கிளாசைப் போலத் தானும் முடியாத ஆத்திரத்தில் மயிரைப் பிய்த்துக்கொண்டான்.

எதுவுமே சொல்லத் தோன்றாத சின்னம்மா, கூட்டிப் பெருக்கிவிட்டுப் போனாள்.

அவன் கதவைப் பூட்டிக் கொண்டான்.

இலங்கை வானொலியில் யாரோ புண்ணியாத்மா வீணையை அறுத்து முடித்தார்.

செய்திகள்.

மரண அறிவித்தல்.

சின்னம்மாவுக்குத் தூக்கி வாரிப் போட்டது. 'நாளை அல்லது அடுத்தநாள் மரண அறிவித்தலை நாங்களும் கேட்க வேண்டியிருக்குமோ?'— அவளின் நெஞ்சு 'படக் படக்' என்றது.

அவள் சொன்னாள்:

'இஞ்சேருங்கோ! அந்தப் பெட்டை சுகந்தா, சண்முகத்தை ஏமாத்திப் போட்டாளாம். வேறு எவனையோ காலியாணம் முடிக்கப் போறாவாம். இவன் கொதிச்சுப் போயிருக்கிறான் சுகந்தாவை உயிரோடு விடுகிறதில்லை என்று நாலைஞ்சு பேரிட்டை சொல்லியுமிருக்கிறான் ... சண்முகத்தின்ரை குணம் உங்களுக்குத் தெரியுந்தானே ......'

அவன் நல்லவன்தான். தன் பாடாய் நடப்பவர்களுக்கெதிராக நாகராஜன் படமெடுப்பதில்லையே.

—யாழ்ப்பாணத்தில் ஒரு சீனியர் 'ஒஃபீசர்' 'சேட்டை' விட்டார்; 'கன்னத்தைப் பொத்தி' வாங்கினர். வழக்கு நடந்தது; ஒருவிதமாக காலிக்கு 'ட்ரான்ஸ்ஸ்பர்' கிடைத்ததோடு சண்முகத்தின் உத்தியோகம் தப்பியது.

காலியில் சாப்பாட்டுக் கடைக்காரனை அடித்தது, கார்னிவலில் அப்புஹாமி என்ற சண்டியனோடு 'கொழுவு'ப் பட்டது, தான்போய் யார் யாருக்கோ கறுத்த கொழும்பானும், ராசவள்ளியும், முருங்கைக்காயும் சுமந்து சுமந்து கொழும்புக்கு 'ட்ரான்ஸ்பர்' எடுத்துக் கொடுத்து .... — இந்த நினைவுகளோடே,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'எணேய்! இப்ப என்ன செய்யச் சொல்லுருய்?'

'இவன் முரடன். அந்தப் பெட்டையின்ரை உயிரை எடுக்கிறனென்று தன் வாயாலேயே சொல்லிப்போட்டான். மத்தியானம் புதுக்கடை, பஞ்சிகாவத்தை, மரியகடைப் பக்கமெல்லாம் திரிஞ்சிருக்கிருன். மணியம் கேட்டதற்கு யாரோ 'ஃப்ரன்டை'க் காணப்போறனென்டவனும்...... எனக்கெண்டாப் பயமாயிருக்கு... ஒருக்கா உங்கட கொண்ணருக்குத் தந்தி அடியுங்கோ'

அன்று வியாழன். வெள்ளி லீவு போட்டால்.....' திங்கள் போயா......, செவ்வாய் பப்ளிக் 'ஹொலிடே'........., பிறகு இரண்டுநாட்களுக்கு 'மெடிகல்' போடலாம்...... சிறிது நாட்களுக்கு அவன் வீட்டோடு இருக்கட்டுமென்று இப்படித் திட்டம் போட்டார்கள்.

அப்பா வந்து சண்முகத்தை 'விட்டேனு பார்' என்று கூட்டிக்கொண்டு போனுர்.

றயிலிலும் அடுத்த நாளும் 'உம்' மென்றிருந்தான்.

மகனின் சங்கதியைக் கேள்விப்பட்டு அம்மாவின் இடுப்பு வலி கூடியது.

அப்பா வழக்கம்போல் வேலைக்குப் போய்வந்தார்.

காலையில் அம்மா தேநீர் கொணர்ந்தபோது அவன் முற்றத்து மாமரத்தையே பார்த்துக்கொண்டிருந்தான்.

அதில் இரண்டு புருக்கள். ஒன்றோடொன்று அவை என்னமாய் சிணுங்கின!

பக்கத்தில் சாராயத் தவறணை. அதன் முகட்டு 'சீலிங்கிற்குள் அவை நிறைய குடியிருந்தன. இந்தக் 'குடி' வேறு.

இன்னமும் இரண்டு புருக்கள் வந்தன.

'தம்பி! புரு இறைச்சி இடுப்பு நோவுக்கு நல்லதாம் முடியுமென்டால் பிடியன்'

சண்முகம் எழுந்தான். பழுதான சைக்கிள் ரியூப் ஒன்றைத் தேடி எடுத்தான். அதில் நீண்ட பட்டிகளாக இரண்டு வெட்டினுன். கிளைவிட்டிருந்த வேலிக் கதியாவில் ஒன்றை வெட்டி, கைக்கு அடக்கமாகச் சீவி அந்த றப்பர் பட்டிகளை இரு பக்கத்திலும் கட்டினுன். காலைக் 'கடித்த' சப்பாத்தைத் தேடிக் கண்டு பிடித்தான். அதன் 'நாக்கை' அறுத்தான். அந்த வாரில் றப்பர் பட்டிகளின் முனைகளைச் சேர்த்துப் பிணைத்தான்.

சிங்களப் 'பொடியன்'களின் 'கெற்றபொல்ல' என்ற கவண்.

மேலே புருக்கள்.

சண்முகம் 'ட்ரையல்' பார்த்துக்கொண்டான். நல்ல விசை.

வலது கையில் பிடி. இடது கையில் றப்பர் பட்டியின் முனை; உருண்டைக் கல்.

புருக்கள் ஒரே இடத்தில் நின்றன.

றப்பர் இரு கைகளுக்கும் இணைப்பாக வேட்டையைத் தூண்டி, நீண்டு நீண்டு வளர்ந்து..... ...

'டப்'

கல் 'விஸ்'ஸெனப் பறந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு புறாவின் தலையில் 'டொக்'!

தலை 'கிர்' ரிட, துடிக்கத் துடிக்க, இறக்கைகளைப் படபடத்துக்கொண்டு, அந்த வேளையிலும் 'பறந்துவிட மாட்டோமா' என்ற ஜீவப் போராட்ட நப்பாசையோடு, சுழன்று சுழன்று வந்து 'பொத்' தென விழுந்தது.

சண்முகம் அருகிற் போய் எடுத்தான்.

மாரடிப்பதைப்போல செட்டைகளை அது அடித்துக்கொண்டபோது அவனது சேர்ட்டில் இரத்தம் தெறித்தது. தலை தொங்கியது. ஒரு கண்ணோடு சேர்ந்து, சொண்டு வெடித்து இரத்தம் ஒழுகிற்று.

அதைக் குசினிக்குள் எடுத்துப் போனான்.

மத்தியானம்.

அம்மா சாப்பிடக் கூப்பிட்டாள். இலையின் முன் அமர்ந்தான்.

புறாக்கறி! ஒரே கம கம!

அம்மா சோற்றை அள்ளி வைத்தாள்.

'நான் எடுத்துக் கொள்கிறேன்' என்றான்.

கொஞ்சம் குழம்பு... ஒன்றிரண்டு இறைச்சித் துண்டுகள் மட்டும் போட்டுக்கொண்டான்.

நாக்கு கவளத்தைப் புரட்டிற்று.

இறைச்சி!

புறா!

நெஞ்சுக்குள் ஏதோ ஒட்டிப் பிடித்தது.

முன்னால், இலையில் சோறு! இறைச்சி!

'இறைவன் சஞ்சரிப்பதாகச் சொல்லும் விண்ணில் — அந்தரத்தில் — உயிர் காற்றில் கரையும் போதுகூட ஜீவனையெல்லாம் இறக்கைகளில் ஏற்றி, தூக்கத் தூக்க துவண்டு ஓடியும் கழுத்தோடு, எவரையுமே கூவி அழைக்க முடியாத வேதனையில் பரிதவித்து, பூமாதேவியையே அணைத்து, மாரடித்து இதோ... இதோ... வாழை இலையில் உயிரோடு துடிக்க...... பருக்கைகள்! இரத்தச் சிதறல்கள்!...........'

அவனால் விழுங்க முடியவில்லை.

எழுந்துவிட்டான்!

'என்னப்பா?......' என்றாள் அம்மா.

'அம்மா...... அந்தப் புறா... அந்தப் புறா......'

அம்மாவுக்கு வேதனைதான்.

சண்முகம் புரிந்துகொள்ளப் பட்டான்; அது போதும் அவர்களுக்கு.

பிட்டும், வெந்தயக் குழம்பும், பலாச்சுளைகளுமாக அம்மா பார்சல் கட்டிக் கொடுத்தாள்.

மாலை அவன் புறப்பட்டான்.

முதற்தடவையாக கொழும்புக்குப் போகிறவனைப் போல அவன் றயிலில் ஏறினான்.

சண்முகத்தைக் கண்ட சின்னம்மாவுக்குள் திகைப்பும், ஆச்சரியமும் போட்டியிட்டுக் கொண்டன.

'லீவு எடுக்காமல் வேலை செய்தால் 'ஓவர்டைம்' கிடைக்குமே. காசு சின்னம்மா காசு!' என்று அவன் சிரித்துக்கொண்டே சொன்னான். ★



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அசுரர்கள் வாழ்கிறுர்கள்

இ. செ. கந்தசாமி

சுந்தரமூர்த்தி உத்தியோகத்திலிருந்து ஓய்வு பெற்றது வயது முதிர்ந்த காரணத்தாலோ, தொடர்ந்து கடமையாற்றுவதற்கு உடல் நிலை சரியில்லாததாலோ அல்ல. அரசாங்க உத்தியோகத்திலிருந்து குறுகிய காலத்திலே பதவியுயர்வு பெற்றுவிட்ட அவருக்கு மாதச் சம்பளத்தைப் பெற்றுக் கொண்டு வாழ்க்கையை ஓட்டுவதென்பது பூரண நிறைவைக் கொடுக்கவில்லை. ஏகப்பட்ட சொத்துக்களுக்கும் நிலபுலன்களுக்கும் அதிபதியான அவர் உத்தியோகம் என்ற சிறையிலிருந்து தன்னை விடுவித்துக்கொண்டு கூடிய வருமானத்தைத் தரத்தக்கதான தொழிலொன்றை மேற்கொள்வதற்கு நீண்ட காலமாகத் திட்டம் போட்டிருந்தார். உத்தியோகம் பார்த்துக்கொண்டிருந்த காலத்திலேயே 'மில்' ஒன்று கட்டுவதற்கான முஸ்தீப்புக்களில் இறங்கிவிட்டார்.

மொழிப் பிரச்சினையைச் சாட்டாக வைத்து ஓய்வு பெற்றுவிட்டார்.

இறுதியாகக் கடமையாற்றிய மலையகப் பகுதியிலிருந்து செல்லச்சாமி என்ற ஒரு தோட்டத் தொழிலாளியை 'மில்'லில் நிரந்தரமான வேலை தருவதாக உறுதியளித்து யாழ்ப்பாணத்துக்கு அழைத்துவந்தார். செல்லச்சாமி மனைவி நான்கு பிள்ளைகள் ஆகிய குடும்பத்துக்கு 'மில்' அமைந்திருக்கும் வளவுக்குள்ளேயே ஒரு குடிசையும் அமைத்துக் கொடுத்தார். செல்லச்சாமி ஏனைய தொழிலாளரோடு பகல் முழுவதும் மில்லில் வேலை செய்வான். இரவில் எல்லாவற்றுக்கும் காவலாக இருப்பான். தன்னுடைய வாழ்க்கையிம் இவ்வளவு அக்கறை காட்டி அன்பு செலுத்தி, சகல வசதியுடனும் குடியமர்த்தி நிரந்தரமானதொரு தொழிலுக்கு உத்தரவாதம் கொடுத்து உதவிய சுந்தரமூர்த்தியை உள்ளக் கோயிலில் தெய்வமாக்கிக் கொண்டான்.

'செல்லச்சாமி மூத்தவனைக் கூட்டிக்கொண்டுபோறன். வீட்டிலை நீண்டால் கெதியா வளந்திடுவான். நல்ல பழக்கமும் பழகியிடுவான். அங்கை என்ன பிள்ளையைப் பிராக்காட்டிறதும் கடைதெருவுக்குப் போறதும் தான் வேலை. பெத்த பிள்ளையைப்போல பாப்பன். சாப்பாடு உடுபுடவையெல்லாம் குடுத்து மாதம் பதினைந்து ரூபாயும் குடுக்கிறன் சம்மதந்தானே!'

'இதுக்கெல்லாம் என்னைக் கேக்கனுங்களா? நீங்க வாயாலை சொல்லுறதை நான் தலையாலை செஞ்சிடுவேனுங்க; உங்க இஸ்டப்படியே செய்யுங்க; நான் மறுத்திடுவேனு!'



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'அதுக்கில்லேச் செல்லச்சாமி பெத்த தகப்பன் நீயிருக்க உன்னே ஒரு சொல்லுக் கேளாமல் விடுகிறது சரியில்லே. உன்ரை மனமும் நோகப்படாது. என்ன இருந்தாலும் நீயும் மனிதன் தானே'

'இல்லேங்க. கடவுள்ள உள்ள பத்தியாலே சிறுத்தொண்டர் தன்னுடைய பிள்ளேயை வெட்டிக் கறிசமைச்சாரே! அப்புறம் கடவுள் அவருக்கு அருள் செஞ்சார்தானே'

'எட நீ நல்ல அறிவாளிதான். உனக்குப் புராணம்கூடத் தெரியுது'

'இல்லேங்க சும்மா தெரிஞ்சதைச் சொன்னேனுங்க'

'நீ ஒரு வஞ்சகம் இல்லாதவன் செல்லச்சாமி'

'எங்களுக்கு ஏனுங்க வஞ்சகமிருக்கும். மத்தவங்களேக் கெடுக்கனும் என்கிற யோசினே வரவே வராதுங்களே. மத்தவங்களுக்குக் கனவிலும் கெடுதல் நினேக்க மாட்டோமுங்க'

'ஏதோ உனக்கு நல்ல காலம் பிறந்திருக்கு'

'எல்லாம் உங்க தயவிலே தானுங்க இருக்கு.'

★

கடவுள்தான் சுந்தரமூர்த்தியின் அவதாரம் எடுத்து வந்திருக்கிருரோ என்ற வியப்புணர்வு செல்லச்சாமியின் மனதில் வியாபித்தது. சொற்களே அளந்து பேசும் திறமை, மற்றவர்களின் வாழ்க்கையில் அபரிமிதமான பற்று பெரியவர்கள், பெரியவர்கள்தான் என்றெல்லாம் சுந்தரமூர்த்தியை மனதால் அபிஷேகம் செய்து கொண்டான். செல்லச்சாமிக்குச் சாப்பாட்டுச் செலவுக்காக காசு கொடுக்கும்போது 'சாமி நம்பிக்கையாய் வேலே செய்ய வேணும். எனக்கும் நாலுபணம் மிச்சம் வந்தால்தான் நீங்களும் நல்லாயிருக்கலாம். அந்தச் செலவு இந்தச் செலவென்டு கண்டபடி சிலவளிக்காதை. நான் சாப்பாட்டுக்கும் மற்றச் சில்லறைச் செலவுகளுக்கும் காசுதாறன். மிச்சக் காசைக் கணக்குப்பாத்து ரொக்கமாத் தந்தா உனக்கும் பிரயோசனமாயிருக்கும்'

செல்லச்சாமி அவர் வார்த்தைக்கு மறுவார்த்தை பேசுவானு? 'நம்பிக்கையாய் வேலே செய்வேனுங்க, நீங்கதான் என் தெய்வம்' என்று நம்பிக்கை கூறினுன்.

தன்னே முற்று முழுதாக சுந்தரமூர்த்திக்கு ஒப்புக் கொடுத்துவிட்டதைப் போல, கிஞ்சித்தும் சலிப்பின்றி மற்றத் தொழிலாளிகளிலும் பார்க்க உற்சாகமாக வேலே செய்தான். செல்லச்சாமிக்கு முப்பத்தைந்து வயதுதான் இருக்கும். வாழ்க்கையில் ஏற்பட்ட நசிவுகளாலும், துன்பங்களாலும் இளேத்துப் போயிருந்தாலும் ஓந்தி போல மெல்லிய உருவமுடையவனுக இருந்தாலும் சுறுசுறுப்பாக வேலேசெய்யக் கூடியவன். அந்த மில்லோடும், மெஷின்களோடும் தானும் இரண்டறக் கலந்து ஒரு உப உறுப்புப் போன்ற நிலேக்கு வந்துவிட்டான்.

யாழ்ப்பாணப் பட்டணஎல்லேக்குள் மில் இருந்தும் நாலேந்து மைல் அப்பாலுள்ள கொக்குவில் என்ற கிராமத்தில்தான் சுந்தரமூர்த்தியின் குடியிருக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொந்தவீடு இருந்தது. காலை எட்டு மணிக்குப் பிள்ளைகளைக் காரில் ஏற்றிக்கொண் பாடசாலையில் இறக்கிவிட்டு எட்டரை மணிக்குப் பிந்தாமல் மில்லுக்கு வந்துவிடுவார். கேற்றைத் தாண்டி காரை உள்ளே நகர்த்திவிட்டு, இருக்கையை விட்டு இறங்காமல் அப்படியே இருந்து கைக்குட்டையை எடுத்து வழுக்கை விழுந்த தலைமுகப்பில் துளித்திருக்கும் வியர்வையை ஒற்றிக்கொண்டு, வாயைத்திறந்து சிகரட் ஒன்றை இதழ்களில் நுழைத்து காரைவிட்டிறங்கியதும் தீக்குச்சியைக் கிறிச் சிகரட் முனைக்குத் தீ மூட்டிப் புகையை உறிஞ்சி விரல்களின் இடுக்கில் சிகரட்டைச் சரணடையச் செய்து புகைக்கும் வாயுடன் கெம்பீரமாக நடந்து செல்வதைத் தினசரிப் பழக்கமாக்கிக் கொண்டார். அலுவலகத்தின் சுவர்களில் ஏற்றப்பட்டிருந்த பல பெரியார்களின் படங்களை அவருடைய கண்கள் ஒருமுறை மேய்ந்தன. அரிய பொன்மொழிகளடங்கிய பலகைகளையும் நோட்டம்விட்டு சொண்டுக்குள் புன்னகைத்துக் கொண்டார்.

## 2

ஆறுமாதங்களுக்கு மேலாக செல்லச்சாமிக்கு சாப்பாட்டுக் கென்று கொடுக்கும் சிறிய தொகையைவிட வேறெந்தக் காசும் கொடுக்கவில்லை. நாட்கள் செல்லச் செல்ல சுந்தரமூர்த்தியின் கொடாப்பத்தர் நிலை செல்லச்சாமியின் நம்பிக்கையில் கீறலை ஏற்படுத்தத் தொடங்கியது.

'என்னங்க ஐயா பெண்டாட்டுக்காறியும், பிள்ளைகளும் சினிமாவுக்குப் போக ஆசைப்படுறுங்க. ஒருக்கா கூட்டிக்கிட்டுக் காட்டிறு தேவலைப்போல இருக்கு'

'சினிமாவுக்குப் போறது வீண் வேலையடாப்பா. காசைக் கண்டபாட்டுக்குச் செலவளிக்காமல் உன்ரை வேலையைப்பார். நீ அங்கை இருந்து இஞ்சை வந்தது வேலை செய்யவோ சினிமாப் பார்கவோ'

கேட்டதுக்கு மாறுக ஏதும் சொல்லமாட்டாரென்று நினைத்துத்தான் செல்லச்சாமி வாய் திறந்தான். இப்படிக் கடுஞ்சொற்களை கக்குவார் என்று இம்மியும் எதிர்பார்க்கவில்லை.

மகனைப் பார்ப்பதற்காக கொக்குவிலுக்கு செல்லச்சாமி முதன் முறையாகச் சென்றிருந்தபோது மகனைப்பற்றிய முறைப்பாடுகள் வரவேற்புப் பத்திரமாக வாசிக்கப்பட்டது.

'சாமி உன்ரை மேன் ஒரு சொல்வளியும் கேக்கிறுனில்லை. சொல்லுற அலுவலைச் சரியாச் செய்யமாட்டான். இவனுடை கத்திறதிலை மனிசருக்குச் சீவன் போயிடும்'

சுந்தரமூர்த்தியின் துணைவியார் செல்லச்சாமியைக் கண்டதும் பட்டியலொன்றை நீட்டினுள். செல்லச்சாமி மௌனியாகி மகனை அருகே அழைத்து அணைத்தபடியே— 'அம்மா, ஐயா சொல்லுற வேலையை சுறுசுறுப்பாகச் செய்யனும். அவங்க மனம் நோகும்படியா நடந்திடக்குடாது'

தலையை 'ஆம்' என்று ஆட்டிய மகனுடைய முதுகை வருடியபோது செல்லச்சாமியின் மனம் சுரீரென்றது. கையில் தட்டுப்பட்ட அந்தத் தழும்பைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்டதும் மகனின் முகத்தை உற்று நோக்க அவனும் பரிதாபம் நிறையத் தகப்பனின் முகத்தை நோக்கினான். அந்தப் பார்வையில் சொல்லமுடியாத வேதனை மின்னலிட்டு ஏககாலத்தில் இருவருடைய கண்களையும் பனிக்கச் செய்தன. 'சரி நான் போயிட்டு வாறன்' என்று கூறியபடியே மடிக்குள்ளிருந்த பேரீச் சம்பழச் சரையை அவிழ்த்து மகனுடைய கையில் கொடுத்துவிட்டு, உச்சியில் மோந்து முத்தமிட்டு நடந்தான்.

'பிள்ளையைப் பெத்த நாங்களே கம்பெடுத்து அடிச்சிருக்க மாட்டம். நம்ம பிள்ளையைக் கொண்டுபோய்க் கொல்லுறாங்களே!'

நடந்ததைக் கேட்ட தாய்க்கு பெற்ற வயிறு பகீரென்று கனன்றது, 'எல்லாம் நம்ம தலைவிதி; யாரை நொந்துதான் என்ன பலன்' செல்லச்சாமி விரக்தி மேலீட்டால் குறுகி அலுத்துக்கொண்டான்.

'ஐயா பெண்டாட்டியின்ரை தங்கச்சிக்காறிக்கு கடுமையான சுகவீனமெண்டு கடுதாசி வந்திருக்கு. ஒருக்கா ஊருக்குப் போயிட்டு வரவேணுமுங்க; சிக்கிரமா வந்திடலாம். கொஞ்சம் காசு வேணும்' தலையைச் சொறிந்து உடம்பை ஒடுக்கி பயம்கலந்த தொனியில் கேட்டான் செல்லச்சாமி.

'என்னடாப்பா இந்த எக்கச்சக்கமான நேரத்திலை நீ போகப்போறனெண்டு நாண்டு கொண்டு நிக்கிறாய்?'

'ஆமாங்க. பெண்டாட்டிக்காறியின் கூடப்பிறந்தவளாச்சே துடியாத் துடிக்குறா'

'இப்ப என்ரை கையிலை காசும் ஒருசதமும் இல்லை. நீயும் சுடுகுது மடியைப்பிடி எண்டு நிக்கிறாய். எனக்கிருக்கிற கஷ்டத்துக்கை போகவேணுமெண்டு சொல்லுறாய். பிறகொரு லீவான நேரத்திலை போகலாம் இப்ப வர வசதியில்லையெண்டு ஒரு கடிதத்தை எழுதிப்போடு'

செல்லச்சாமி வேதனையால் சாம்பினான். மனைவி புலம்பியழுதாள். காகங்கள் கரைவது நல்லதுக்கா! அபசகுனத்துக்கா?

ஒரு காகம் இறந்துகிடக்க, எத்தனை காகங்கள் கரைந்து புலம்புகின்றன. தங்கச்சிக்கு ஏதாவது நடந்திருக்குமோ காகம் இறந்துகிடந்தது ஏதும் துர்க்குறியாக இருக்குமோ என்றெல்லாம் மனைவி சித்தம் கலங்கினாள்.

வேலைசெய்தும் சம்பளம் இல்லை. சம்பளம் கேட்கும் போதெல்லாம் அதை இதைச் சொல்லி மழுப்பி சறுக்கிக் கொண்டே வருகின்றார் சுந்தரமூர்த்தி. இந்தக் கொடுமையிலிருந்து விடுபட வேண்டுமென்ற முடிவுக்கு வருவதைத் தவிர செல்லச்சாமியால் வேறொன்றும் இயலவில்லை.

'இந்தாங்க, இந்த இடத்திலை ஒரு நிமிஷமெண்டாலும் இருக்கமாட்டனுங்க. எங்கெண்ணலும் பிச்சையெடுத்து சீவிப்போமுங்க'

மனைவிக்குப் பொறுக்கமுடியவில்லை. 'சரிதான் நாம எங்கை இருந்தாலும் ஒன்னுதான். ஏழைகளாய் பிறந்ததே பெரிய குற்றம். அதிலையும் எங்களுக்கு ஒரு நாடுமில்லை. வீடுமில்லை. ஒன்னுமில்லை'



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'சரி சரி நம்ப சம்பளக் காசை அவர்கிட்ட கேளுங்க, வாங்கிக்கிட்டு எங்கையெண்டாலும் போய்விடுவோமிங்க'

மனைவியின் வார்த்தை ஓரளவுக்கு நியாயபூர்வமாக இருந்ததால் அதையே முடிவாக்கிக் கொண்டான்.

காரைவிட்டிறங்கி ஆஜானுபாகுவான தோற்றத்துடன் மில்லை நோக்கி நடந்தார் சுந்தரமூர்த்தி. கபிலநிறச் சோட்டும் வெள்ளை லோங்சும் அவருக்கு எடுப்பாகத்தான் இருக்கிறது. அவர் விரல் இடுக்கிலிருந்த சிகரட்டை நெருப்பு நுனி புகைக்க வைக்கிறது. அந்த வாசனை கம்மென்று வீசுகிறது. இன்றைக்கு எல்லாவற்றையும் கேட்டுவிட வேண்டுமென்ற முடிவைத் துணிவாக்கிக் கொண்டான் செல்லச்சாமி.

'ஐயா மேற்கொண்டு வேலை செய்ய எனக்கு விருப்பமில்லைங்க' செல்லச்சாமியின் சொற்கள் சுந்தரமூர்த்தியைத் திடுக்கிட வைத்தது.

'ஏன்ராப்பா என்ன நடந்தது'

'நீங்க முன்னமே பேசிக் கொண்டபடி, எங்களுக்குச் செலவுக்குத் தந்ததைக் கழிச்சிட்டு மீதமா உள்ளதை தாருங்க'

'என்னடப்பா சாமி. நான் என்ன உன்ரை காசைக் கொண்டேபோகப் போறன். நீ பாடுபட்டு உழைச்ச காசெல்லே. இந்த மாதத்தோடை உன்ரை கணக்கைப் பாத்தா நீதான் எனக்குக் காசு தரவேணும்'

சுடுபுழுங்கல் போல செல்லச்சாமியின் மனம் கொதித்தது. 'மோசம் பண்ணிறீங்களே! முதல்ல என்னெல்லாமோ சொல்லிக் கூட்டியந்தீங்க'

சொன்னது உண்மைதான். நான் என்ன செய்யிறது. தொழில் வருவாய் ரொம்பக் குறைவு. நட்டமாப் போச்சு.

'எங்களைக் கூட்டியாந்து நன்ஞ உழைப்பிச்சுத் தின்னிட்டு இப்ப வாலைக் காட்டுறீங்களே!'

'டேய்! எக்கச்சக்கமாய்க் கதைச்சியோ கள்ளத்தோணியெண்டு பொலிசிலை பிடிச்சுக் குடுத்திடுவன்'

'நல்லாப் புடிச்சுக் குடுங்க. பிரஜாவுரிமை எடுத்துத் தாறனெண்டு இருக்குத்தானு கூட்டியாந்தீங்க? இனிமே இந்தத் தொல்லை வேண்டாம். இந்த இடத்தையே காலிசெய்யுறேமுங்க'

'டேய் எங்கையடா போய் பிழைக்கப்போறுய்? என்ன தொழில் தெரியும் உனக்கு?'

'இந்த இரண்டு கைகளும் இருக்கு. கால் இருக்கு. உஷார் இருக்கு. எங்களை அசைக்கேலாது'

★

செல்லச்சாமி குடும்பம் நடுத்தெருவில் நின்று திகைத்தது. பாம்பின் கால் பாம்பறியும் என்பதுபோல ஏழைகளுடைய கஷ்டத்தை ஏழைகள் தான் உணர்வுபூர்வமாக அறிய முடியும். இரக்கமுள்ள ஒருவன் தங்கள் வீட்டில் கொஞ்ச நாட்களுக்காகவாவது வந்து இருக்கும்படி கூட்டிக்கொண்டு போனன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'ஏழைங்களுக்கு ஏழைகள் தானுங்க இரக்கப்படுவாங்க. பெரிய மனுஷங்கள்ள சுத்த அயோக்கியப் பசங்க இருக்காங்க. அசுரப் பசங்க இருக்காங்க' செல்லச்சாமி ஆத்திரத்துடன் கூறினுன்.

அதுவும் ஒரு சிறிய குடிசை. அதற்குள்ளேயே மூன்று குடும்பம். 'என்னசெய்யிறது. பகலிலே ஒண்டாச் சமைச்சுத் திண்டிட்டு இரவுப் பொழுதுக்கு முத்தத்திலேயெண்டாலும் உறங்குவம். எங்களுக்குக் கடவுள்தான் துணை'

அந்த வீட்டுப் பெண்மணி நிலைமையைச் சமாளிக்கிருள். வஞ்சிக்கப்பட்ட செல்லச்சாமியின் உள்ளம் இரவிரவாக வேதனையால் தகித்தது. தூக்கம் தழுவாத நிலையில் அமைதியை இழந்து பெருமூச்செறிந்தான்.

ஈசிச்சேரில் மல்லாந்தபடியே அன்றைய ஆங்கில தினசரியைப் படித்துக்கொண்டிருக்கிறுர் சுந்தரமூர்த்தி. அவருடைய அருகில் படுத்திருந்த அல்ஸ்சேசன் நாய் கேற்றடியைப் பார்த்துக் குரைக்க, அந்த ஒலியோடு கேற்றடியை அவர் கண்கள் பார்த்தன. செல்லச்சாமி வந்து கொண்டிருக்கிறுன். அவன் வாசற்படியை நெருங்குவதற்கும் சுந்தரமூர்த்தி எழுந்து வருவதற்கும் சரியாக இருந்தது. கையிலிருந்த சிகரெட்கட்டையை வெளியே எறிந்துவிட்டு காறிக் காறித் துப்பியபடியே 'என்ன செல்லச்சாமி?' என்று நக்கலுடன் கேட்டார்.

'நம்ப பையனைக் கூட்டிக்கிட்டுப் போகத்தானுங்க வந்தன். இவ்வளவு நாளும் வேலை செஞ்ச காசைத் தந்து மகனை என்னேடு விட்டிடுங்க'

சுந்தரமூர்த்தி ஒரு நஞ்சுச் சிரிப்பை உதிர்த்தார்.

'நீ பெடியனை இஞ்சை வேலைக்கு விடயில்லை. வளத்து விடச்சொல்லித்தான் விட்டனி. இவ்வளவு நாளும் சாப்பாடு உடுபுடவையெல்லாம் குடுத்து பாதுகாப்பா வளத்திருக்கிறன். இதுகளுக்கெல்லாம் நீதான் எனக்குக் காசு தரவேணும். உன்ரை பெடியனை வளர்த்ததற்குக் காசைக் கொண்டந்து தந்திட்டுக் கூட்டிக்கொண்டு போ;'

'ஐயா உங்களை நம்பித்தான் நாங்கள் வந்தநாங்க. மில்லிலே இரவு பகலாக கஷ்டப்பட்டன். அதுக்குச் சம்பளமில்லை பையனைக் கூட்டிவந்து வேலை வாங்கினிங்க. அதுக்கு ஒண்ணுமில்லை. கடைசியா வளத்ததுக்கு நான் பணம் தரவேணுமெங்கிறீங்களே!'

'சரிங்க; எனக்குக் காசு வேணுமுங்க. பையனை விடுங்க'

'அவனை விட ஏலாது! போய்ச் செய்யிறதைச் செய்!'

செல்லச்சாமியின் மனம் வைரமாகியது. சுவரோரம் நின்ற மகனைக் கையில் பற்றிய வனாய் இழுத்துக்கொண்டு விறுவிறுவென்று விரைந்தான். கேற்றைத்தாண்டி வலப்புறமாகத் திரும்பியவன் பின்னுல் கேட்ட அரவத்தால் அதிர்ந்தான். 'சடார்'

மண்டையிலிருந்து இரத்தம் பீறிட்டது. முகங்குப்புறக் கீழே விழுந்தான் செல்லச்சாமி. 'ஐயோ அப்பா!' என்ற மகனின் குரல் அந்தப் பிரதேசத்தையே ஒருமுறை அதிர வைத்தது. வீரபத்திரர் கோலத்தில் கையில் பொல்லுடன் நின்று கொண்டிருந்தார் சுந்தரமூர்த்தி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எல்லாம் தெரிந்தவர்

*த. ராஜசேகரன்*

'இலக்கிய இயக்கத்தில் வியாபார நோக்கற்ற, அரசியல் நோக்கற்ற ஒரு கொள்கை உருவாகி வரும் சமயத்தில்...... ...' என டி. அருப் சீவராம் (இறைவனைப் போன்று இவருக்கும் பல பெயர்கள் உண்டு) **'கோணல்கள்'** ('அஃக்' அக்டோபர் 1972) என்ற தலைப்பைத் தாங்கிய தமது கட்டுரையில் குறிப்பிடுகின்றார். சீவராமிற்கு வியாபார நோக்கில்லை என்பதை நான் ஒப்புக்கொள்கின்றேன். ஆனால் தனக்கு அரசியல் நோக்கில்லை என்ற தொனிபட அவர் எழுதுவது ஏற்க முடியாததாயிருக்கின்றது. 'எமது காலத்தில் மனிதனின் தலைவிதி அரசியல் ரீதியாகவே நிர்ணயிக்கப்படும்' என தோமஸ் மான் மொழிந்திருப்பது நினைவு கூரற்பாலது. தவிர, 'கம்யூனிச நாடுகளில் ஆன்மீகச் சுரண்டல் எவ்வளவு கேவலமாக நடைபெறுகின்றது என்பதை ......' என்ற அவரது கூற்றிலிருந்தும் 'ரைம்', 'நியூஸ்வீக்', போன்ற அமெரிக்கப் பத்திரிகைகளுக்கு அவர் வக்காலத்து வாங்குவதிலிருந்தும் அவரது அரசியல் சார்பு என்ன என்பது நுனிப்புல் மேயும் வாசகனுக்குக்கூடப் புலனாகும். பொதுவுடமையை அவர் ஏற்கவேண்டுமென்று நான் சொல்லவில்லை. அதை எதிர்க்கக் கூடாது என்றுகூட நான் கூறவில்லை. ஆனால் பொதுவுடமையை ஆதரித்து அதைப் பரப்பவிழைவது அரசியல் என்றால், பொதுவுடமையை எதிர்ப்பதும், கண்டிப்பதும் அரசியல் தானே! நிலை இவ்வாறிருக்க தனக்கு அரசியல் நோக்கில்லை என அவர் பாவனை செய்வது தான் வேடிக்கையாக இருக்கின்றது. வாசகர்களை ஏமாற்றுவதாக அவர் நினைக்கலாம்; ஆனால், பாவம் அவர் தன்னைத் தானே ஏமாற்றுகின்றார்.

அவரது கட்டுரையின் கணிசமான பகுதி கோட்டைக்குள் நடைபெற்ற குத்து வெட்டுகளைப் பற்றியது. சம்பந்தப்பட்டவர்களே அதுபற்றிக் கருத்துத் தெரிவிக்க வேண்டும். ஒன்று மட்டும் கூறவிரும்புகிறேன்: கலை, இலக்கியம் தமது ஏகபோகச் சொத்தெனக் கருதி ஒரு வரையொருவர் முதுகு சொறிந்து வந்த கும்பலுக்குள் இப்படி வெடிப்புக்கள் ஏற்பட்டிருப்பது எனக்கு வியப்பை அளிக்கவில்லை. அனைத்த கை தானே அடிக்கும்!

'இதனடியில் ஆத்மா இல்லை ஒரு திட்டம்தான் தெரிகிறது' என அவர் குறிப்பிடுகின்றார். அவர் கூறுவது போன்று உண்மையில் சதித்திட்டம் உண்டோ, இல்லையோ எனக்குத் தெரியாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால், டி. ஆரூப் சிவராம் போன்றோரின் கம்யூனிச எதிர்ப்பிற்கு ஒரு பின்னணி இல்லாமலில்லை.

ரஷ்யாவிற்கும், அமெரிக்காவிற்குமிடையே நடைபெற்று வரும் கெடுபிடிப் போர் அரசியல் துறையோடு மட்டும் நின்றுவிடாது கலை, இலக்கியத் துறைகளிலும் வியாபித்திருக்கின்றது. கலாசார சுதந்திரப் பேரவை என்ற பெயரில் இயங்கி வந்த அமெரிக்க நிறுவனம், கலாசாரத்துறையில் கெடுபிடிகளுக்குத் தூபமிட்டு வந்தது. இப் பேரவையுடன் மின்னுமசானி போன்றவர்கள் ஒரு காலத்தில் தொடர்பு கொண்டிருந்தனர். இதிலிருந்து இப்பேரவை எந்த வர்க்க, அரசியல் நலன்களைப் பேணியது என்பது சொல்லாமலே விளங்கும்.

இப்பேரவைக்கும், அமெரிக்க சி. ஐ. ஏ. நிறுவனத்திற்கும் தொடர்புண்டு. 'என்கவுண்டர்' என்னும் பிரித்தானிய சஞ்சிகை இப்பேரவையின் ஆதரவில் நடைபெற்று வந்த காலத்தில் அதன் இணையாசிரியர்களில் ஒருவர் சி. ஐ. ஏயின் ஆள் என்பது அம்பலமாகியது. இந்த உண்மை வெளியாகியதும் இச்சஞ்சிகையின் இணையாசிரியர்களில் ஒருவரான ஆங்கிலக் கவிஞர் ஸ்ரிபன் ஸ்பெண்டர் தனது எதிர்ப்பைக் காட்டும் முகமாக தனது பதவியை உதறித் தள்ளினார்.

'என்கவுண்டர்' போன்ற சஞ்சிகைகள் கெடுபிடிப்போரை வளர்த்து வந்த விதத்தையும், பக்கம் சாராமை என்ற போர்வையில் அவை பொதுவுடமை நாடுகளுக்கெதிராகப் பிரச்சாரம் செய்து வந்ததையும் குரூஸ் ஓ பிரயன் என்பவர் ஆதாரபூர்வமாக ஒரு கட்டுரையில் நிறுவியுள்ளார்.

கம்யூனிச எதிர்ப்பு வேலைகளை பேரவை செய்திருக்கக்கூடாது என்பதல்ல எனது வாதம். அதைச் செய்ய அவர்களுக்குத் தாராளமாக உரிமையுண்டு. ஆனால், நடுநிலைமை, கலாசாரச் சுதந்திரம் என்ற போர்வையில் இத்திருத்தொண்டைச் செய்வது விலைமாது படிதாண்டாப் பத்தினியாக வேடம் போடுவதற்கு ஒப்பாகும்.

இவ்வரலாற்றுப் பின்னணியில் நோக்கும்போது. சிவராமின் கம்யூனிச எதிர்ப்பிலிருந்தும் சோல்ஜனிட்சின் போன்ற எழுத்தாளர்களை சிவராம் போன்றோர் ரஷ்யாவைத் தாக்குவதற்கு ஓர் ஆயுதமாகப் பயன்படுத்துவதிலிருந்தும் கெடுபிடிப்போர் தமிழ் இலக்கிய உலகிற்கும் பரவிவிட்டது என்று ஊகிக்க இடமுண்டு.

கார்ல் மாக்ஸ் கொடுத்து வைக்காதவர். அவர் இன்று வாழ்ந்து சிவராமிடம் 'குரு போதம்' பெற்றிருந்தால் புரட்சிபற்றி அப்படியெல்லாம் எழுதியிருக்க மாட்டார். சிவராம் எல்லாம் தெரிந்தவராயிற்றே. புரட்சி என்றால் நாய்வாலை நிமிர்த்தும் வேலைதானே! ஆனால் மாக்ஸ் இதை அறியாமல் உற்பத்திச் சாதன உடைமையில் அடிப்படை மாற்றங்களை ஏற்படுத்துவதன் மூலம் புதிய சமூக மனித உறவுகளை உருவாக்கி சுரண்டலை ஒழிக்க வேண்டும் என்றல்லவா தெரியாத்தனமாக உளறிவிட்டார். பாவம். சிவராமின் சிடராகும் பாக்கியம் அவருக்குக் கிட்டவில்லையே! சிவராம் கூறுகிறார்: 'ஆனால் தனித்த தொழிலதிபர்கள் திருந்தியிருக்கிறார்கள்......' பொதுவுடமைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புரட்சி ஏற்பட்டால் தொழிலதிபர்களுக்கு எங்கே ஐயா அங்கு இடமுண்டு? அப்படியொரு வர்க்கம் அப்பொழுது இருந்தால் அல்லவா அவர்கள் திருந்துவதற்கு இடமிருக்கும். ரஷ்யாவிலோ, சீனுவிலோ சுரண்டல் அறவே ஒழிந்துவிட்டது சமத்துவம் ஏற்பட்டுவிட்டது என நான் கூறவில்லை. மந்திரவாதி மந்திரக்கோலை அசைத்தவுடன் பொருள் மறைவது போன்று புரட்சி ஏற்பட்டவுடன் சுரண்டல், ஏற்றதாழ்வு முற்றுக ஒழிந்துவிடும் என எதிர்பார்ப்பது மடமையாகும். சிவராம் தனக்கு எல்லாம் தெரியும் என்ற எண்ணத்தைக் கைவிட்டு நடுநிலைமையானவர்கள் இவ்விரு நாடுகளிலும் ஏற்பட்டுள்ள புரட்சிகரமான மாற்றங்களைப் பற்றி அங்கு உருவாகிவரும் புதிய சமுதாயத்தைப் பற்றி எழுதியவற்றை வாசித்தார் என்முல் அவருக்குப் புரட்சி என்முல் என்ன என்பது விளங்கும்.

ரஷ்யாவில் ஆன்மீகச் சுரண்டல் நடைபெறுவதாகக் கூறுகின்றூர். வாதத்திற்கு ஏற்றுக்கொள்வோம். ஆனுல் அவருடைய கண்ணுக்கு அமெரிக்காவில் நடைபெற்ற ஆன்மீகச் சுரண்டல் படவில்லை. போல் ரேப்சன், சார்ளி சப்பிளின் போன்ற கலைஞர்களுக்கும் மக்காதியின் கம்யூனிச வேட்டையின் போது எத்தனையோ கலைஞர்களுக்கும் எழுத்தாளர்களுக்கும் இழைக்கப்பட்ட கொடுமைகள் இந்த 'எல்லாம் தெரிந்தவரு'க்குத் தெரியாதா? ஏன் வியட்நாமின் அகத்துக்கும் புறத்துக்கும் அமெரிக்கா செய்துவரும் கொடூரங்களை அவர் அறியாரா?

சிவராமிற்கு ஆன்மீகச் சுரண்டலைப் பற்றித்தான் அக்கறை. அவருக்கு லௌகீகச் சுரண்டலைப்பற்றி எவ்வித அக்கறையும் இல்லைப்போலும். அதற்குக் காரணமுண்டு. நான் கூறப்போவது அவரைப்பற்றிய சில தனிப்பட்ட விடயங்கள்: அவரைத் தாக்கி அவமானப் படுத்தும் நோக்கோடல்ல, அவரது வாழ்க்கை முறைக்கும் அவரது கருத்துகளுக்குமிடையே உள்ள உறவை சுட்டிக்காட்டும் பொருட்டுத்தான் நான் அவற்றை இங்கே குறிப்பிடுகின்றேன். தரும சிவராமு ஒட்டுண்ணி வாழ்க்கையே வாழ்கிறூர். இலங்கையில் இருக்கும்போது எதுவித தொழிலும் செய்யாது, தாயின் உழைப்பிலே வாழ்ந்தார். தாய் கஷ்டப்பட்டு உழைத்து இவருக்குச் சோறு போடவேண்டியிருந்தது. தாய் இறந்ததும் வீட்டை விற்றுவிட்டு கனடாவுக்கு கலை வாழ்வு வாழச் செல்வதாகப் பிரகடனம் செய்து புறப்பட்டு இப்பொழுது இந்தியாவில் தங்கியிருக்கின்றூர். கையிலிருக்கும் காசு கரைந்ததும் பழையபடி ஒட்டுண்ணி வாழ்க்கையை நாடவேண்டியது தானே! இத்தகையவர் கம்யூனிசம் என்றதும் வெகுண்டு எழுவது இயல்புதானே!

இன்று அவர் சி. சு. செயை பகைத்துக்கொண்டார் என்முல் இவரது ஒட்டுண்ணித்தனமே காரணம் என நாம் ஐயுறவேண்டியுள்ளது. அதேபோன்று இன்று அவர் தலையிலே வைத்துப் போற்றுகின்றவர்களை நாளை வையத்தொடங்கினுல் நாம் ஆச்சரியப்படப் போவதில்லை. ஒட்டுண்ணியின் மதிப்பீடுகள் விருந்தோம்பலுக்கு ஏற்ப மாறத் தானே செய்யும்.

'சமீபத்தில் ஜோசப் புறொட்ஸ்கி என்ற கவிஞன் அங்கே கவிதையைத் தவிர வேறெதுவும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்யாத குற்றத்திற்காக கழிவுப் பொருள்களை சுத்திகரிக்கும் தண்டனை பெற்றிருக்கிறுன்' என்கிருர் தருமு. இக்கூற்றினை நாம் இரண்டு வகையாகப் பொருள் கொள்ளலாம். ஒன்று. கவிதை எழுதுவதைத் தவிர வேறு தொழில் செய்யாதிருப்பது ரஷ்யாவில் குற்றம். **இது இருக்கவே இருக்க முடியாது.** ஏனென்ருல் அங்கு எழுத்தையே நம்பிவாழும் எழுத்தாளர்களும் கவிஞர்களும் இருக்கின்றனர். யெவ்டுசென்கோ போன்ற கவிஞர்களைப் பற்றி வாசகர்கள் அறியாதிருக்க முடியாது. அப்படியெனின் வேறு எப்படி பொருள் கொள்வது? புரொட்ஸ்கி கவிதை எழுதினதல்ல பிரச்சினை. அவர் கவிதையில் என்னத்தை எழுதினுர் என்பதுதான் பிரச்சனைக்குரியது. அவர் எழுதியவை ரஷ்யாவின் சட்டங்களை மீறியிருந்தால் அவர் அதற்குரிய தண்டனையைப் பெற்றுத்தானே ஆகவேண்டும். இது ரஷ்யாவிற்குப் பிரத்தியேகமானதன்று. முதலாளித்துவ நாடுகளில்கூட இனவெறியைத் தூண்டும் அல்லது நாட்டின் பாதுகாப்பிற்கு பங்கம் விளைவிக்கும் எழுத்துக்களும், ஆபாச எழுத்துக்கள் போன்றவையும் சட்டவிரோதமானவையே. எழுதுவதும் ஒருவகை வினையாற்றுதல் என சார்த் மொழிந்திருப்பது ஈண்டு குறிக்கற்பாலது.

'பத்திரிகைகளின் வியாபார நோக்கங்களைப் பூர்த்திபண்ண எழுதுவதற்கும் ஒரு கட்சியின் கொள்கைகளை விளக்கி எழுதுவதற்கும் வித்தியாசமே இல்லை என்பது கம்யூனிசம் போன்ற கெடுபிடியுள்ள ஒரு கட்சியில் உள்ளவர்களுக்கு புரியவராது' என்கிருர் சிவராமு. வெறும் பணத்துக்காக பத்திரிகைகளின் வியாபார நோக்கங்களைப் பூர்த்திபண்ண வளைந்து கொடுக்கக் கூடியவனுக்கும் கொள்கை மீது உள்ள மனமார்ந்த பற்றினுல் உந்தப்பட்டு அதனைப் பரப்ப விழைபவனுக்குமிடையே உள்ள வேறுபாடு ஒட்டுண்ணியர்களுக்குப் புரியாத புதிர்தான். அவர் மன்னிப்போமாக.

'உருவம் உள்ளடக்கம் என்று கலைப்பொருளை துண்டுபோட்டு அரித்துப் பார்த்து மார்க்சீயத்துக்கு ஒத்துவருமா வராதா என்பதைத் தவிர வேறெதையும் காணமாட்டாத கண்கள்.........' எனச் சாடும் சிவராம் பின்னர் தனக்குத்தானே நேர்த்தியாகக் 'கால் தட்டு' போடுகிருர்; 'ஞானக்கூத்தனுல் பழங்கவிதையின் சப்தக்கூடு கருத்திசைவை எவ்வளவுக்கு பாழாக்கும் என்பதை உணரக்கூட முடியவில்லை. ஒன்று புதுக்கவிதை என்பதே இச்சுமைகளை அறுத்தெறிந்து விட்டு சிறகு பெற்றதுதான். அர்த்தத்தின் கடுமையையும் அதன் ஆழத்தின் மூலம் ஒரு எல்லையின்மையையும் காண விழைந்த புதுக்கவிஞனுக்கு சப்தம் உண்மையில் இரண்டாம் பட்சம் தான்' புதுக் கவிஞரோடு சேர்ந்து சிவராம் அர்த்தம் (அதாவது உள்ளடக்கம்) சப்தம் (அதாவது உருவம்) என புதுக் கவிதையைக் கூறுபோட்டுவிட்டு மார்க்சீயவாதிகள் மீது பாய்வது நகைப்பிற்குரியது. மீசையைத் துடையும், ஐயா, மீசையைத் துடையும்.

சிவராம் கூறுகிருர். 'இலக்கியத் 'தயாரிப்பு'களைப் படிக்கும் வாசகர் கூட்டம் இக்கூட்டத்திலுல் 'ஒரிஜினுல்டி' உள்ள எழுத்தாளர்களை இனம் காணவோ, யார் யாரை இமிட்டேட் பண்ணுகிருர் என்பதை உணரவோ, மாரீசம் என்ற இலக்கியத் திருட்டு எவ்வளவு மட்டமான நேர்மையின்மை என்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புரிந்து கொள்ளவோகூட முடிவதில்லையா? 'ஓரிஜினல்டி'க்கு தமிழில் வார்த்தைகூட இல்லையே தமிழ் மொழியின் ஆணிவேர்களையே பிடுங்கி ஆராயுமளவு தத்துவ, இலக்கிய செயல் முறைகளில் ஈடுபட்டால்தான் ஒரு விழிப்புள்ள வாசகர் கூட்டத்தை உண்டாக்க முடியும் போலும்' தமிழ் மொழியின் ஆணிவேர்களைப் பிடுங்க வேண்டிய அவசியமே இல்லை. 'ஓரிஜினல்டி' என்ற சொல் ஆங்கிலத்தில்கூட: தொடக்கத்தில் இருந்து வந்த, மிக முந்திய, மூலப்படிவம் என்ற அர்த்தங்களிலே தான் முதன் முதல் பயன்படுத்தப் பட்டது. இன்று ஓரிஜினல்டி'க்கு ஆங்கிலத்தில் பாய்ச்சப்படும் நேர்முரணான அர்த்தம் (வேறொன்றின் அடியாகப் பிறக்காத, புதுமையான) மிகப் பிந்திய வழக்கே. ஆங்கிலத்திலேயே நிலைமை இவ்வாறிருக்க 'ஓரிஜினல்டி'க்கு தமிழில் வார்த்தைகூட இல்லையே என ஒப்பாரி வைக்கவேண்டியதில்லையே. புதிய சிந்தனைப் போக்குகளும், கருத்துப்போக்குகளும் தலைதூக்கும் போது அவை வேண்டி நிற்கும் சொற்களும் உருவாகிவிடும். மேற்கத்திய கலாசாரத்தின் தாக்கத்தினால் 'ஓரிஜினல்டி' என்ற இன்றைய அர்த்தத்தை தமிழிலே பாய்ச்ச வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டதும், அதற்கான சொற்கள் உருவாக்கப்பட்டு விட்டன. தற்படைப்பாற்றல், தற்கற்பனை ஆற்றல், தற்படைப்புத் திறம் போன்ற சொற்களை நோக்குக.

கலாயோகி ஆனந்தக் குமாரசாமி 'ஓரிஜினல்டி'க்கும் 'நொவெல்டி'க்கும் வேறுபாடு கண்டார். பின்னையது வெறும் புதுமையைக் குறிக்கும் என்றும், முன்னையது மூலப்படிவத்தின் உயிர்த்துடிப்பைக் குறிக்கும் என்றும் அவர் கூறினர்.

'மாரீசம் என்ற இலக்கியத் திருட்டு' பற்றி ஒருசில வார்த்தைகள். தனி மனித வாதம் தோன்றியபின்பு தான் இலக்கியத்திலும், கலையிலும், எழுத்து அல்லது கலைத்திருட்டு ஒரு பிரச்சினையாகத் தலைதூக்கியது எனலாம். இத்தனி மனித வாதம் தோன்றுவதற்கு ஏதுவாய் இருந்த பொருளாதார, அரசியல், சமூக காரணிகளை நான் இங்கு ஆராய வேண்டியதில்லை. நிலமானிய முறை சிதைவுறுவதற்கு முற்பட்ட காலத்திலே எவராவது கருத்துக்களிலே தனிச் சொத்துரிமை கொண்டாடியதில்லை. வள்ளுவப் பெருந்தகையின் குறளை இங்கு நினைவு கூறுதல் நன்று.

'எப்பொருள் யார்யார் வாய்க்கேட்பினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்ப தறிவு,

இதே கருத்தினைத்தான் தோமஸ் கெம்பிஸ் என்ற சமய குரவரும் வலியுறுத்தினர். 'யார் சொன்னார் என்பதைப் பற்றிக் கவலைப்படாதே. என்ன சொல்லப் பட்டது என்பதைப் பற்றிச் சிந்தி' என அவர் மொழிந்தார். இவ்விரு மேற்கோள்களிலிருந்தும் கீழைத் தேச மரபிற்கும், மேல்நாட்டு மரபிற்குமிடையே முன்பிருந்த ஒற்றுமை புலனாகும். ஐரோப்பாவிலே மறுமலர்ச்சி ஏற்பட்டதன் விளைவாக இரு மரபுகளும் பிரிந்து செல்லலாயின என கலாயோகி ஆனந்தக் குமாரசாமி சுட்டிக் காட்டியமை ஈண்டு குறிக்கற்பாலது.

எந்நாட்டை எடுத்துக் கொண்டாலும் வாய்மொழி இலக்கியம் என்றாலும்சரி, சான்

ஞரர் இலக்கியம் என்ருலும் சரி பழைய காலத்திலே ஓர் எழுத்தாளன் கையாண்ட பொருளையோ, கதையையோ உவமான உவமேயங்களையோ இன்னெரு எழுத்தாளன் கையாளக் கூச்சப்படவில்லை. இவ்வாறு செய்வது எழுத்துத் திருட்டு என்று கருதப்படவுமில்லை. இலக்கியப் பரிச்சயமுடையவர்களுக்கு இவ்வுண்மை நன்கு தெரியுமாதலால் எடுத்துக் காட்டுகளை இங்கு தராது விடுகின்றேன்.

பழைய காலத்திலே இலக்கியப் படைப்பாற்றலின் தன்மை பற்றி முழுமையான விழுமிய விளக்கம் நிலவிற்று என 'இலக்கியத்தின் கோட்பாடு' என்ற நூலினை எழுதிய ஆசிரியர்களான வெலக்கும், வொறனும் கூறுகின்றனர். இலக்கியத்திலே தற்கற்பனை ஆற்றல்பற்றி இன்று தப்பான கருத்துக்கள் நிலவுவதாக அவர்கள் குறிப்பிடுகின்றனர். மரபை மீறுவதும், புதுக்கரு அல்லது பொருளை ஆள்வதும்தான் தற்கற்பனை ஆற்றலுக்குச் சான்றுகள் என இன்று பொதுவாக நம்பப்படுவதாகவும் ஆனல் இது தவறு என்றும், இவற்றின் கலைப்பெறுமதி குறைவானது என்றும் அவர்கள் சுட்டிக் காட்டுகின்றனர். பிறிதின் சார்பு அறவேயற்ற படைப்பு அறவே தரமற்றது என்ற எலியட்டின் கூற்று சிந்திக்கப்பாலது. ஞாயிற்றுக்குக் கீழே, அதாவது அவனியிலே புதியது ஒன்றுமில்லை என ஆங்கிலத்தில் கூறப்படுவது வழக்கம். அக்கூற்றினையும் நாம் சிந்தித்தல் நன்று.

பண்டைக் காலந்தொட்டு நவீன காலம்வரை சில பொருள்களும் உருவகங்களும் தொடர்ந்து ஐரோப்பிய இலக்கியத்திலே (நவீன இலக்கியம் உட்பட) கையாளப்பட்டு வந்திருப்பதை இ. ஆர். கேட்டியஸ் என்னும் அறிஞர் விளக்கியிருக்கிருர். ஒரு குறிப்பிட்ட மரபைப் தழுவி அதன் உத்திகளை, அதன் பாணிகளைக் கையாளுவதால் உணர்ச்சி வேகத்திற்கும் கலைப் பெறுமானத்திற்கும் ஊறு விளைவதாகக் கருத வேண்டியதில்லை என வெலக்கும், வொறனும் சரியாகச் சுட்டிக்காட்டியிருக்கின்றனர். அவர்கள் கூறுவது போல கலைஞனின் உருமாற்று வல்லமையிலேதான் எல்லாம் தங்கியிருக்கின்றது, வெறும் புதுமையில் அன்று. பண்டைக்காலத்து இந்தியச் சிலைகளை நோக்குவோமாயின் இதன் உண்மை நன்கு புலப்படும். 'ஒரிஜினல்டிக்'கும் 'நொவல்டிக்'கும் கலாவிற்பன்னர் ஆனந்தக் குமாரசாமி கண்ட வேறுபாடு இங்கு வெகு பொருத்தமாகப் படுகின்றது.

மேற் கூறியவற்றிலிருந்து கலை, இலக்கியத் திருட்டு என்ற ஒன்று இல்லை என நான் நிலைநாட்டத் தலைப்படுவதாகக் கருத வேண்டியதில்லை. இது பற்றி மேலும் இங்கு ஆராயவேண்டியதில்லை.

தமிழகத்தில் 'ஒரிஜினல்' என கட்டியம் கூறிக்கொண்டு வெளியாகும் படைப்புக்கள் பலவற்றில் மேல்நாட்டுப் படைப்புக்களின் சாயல்கள் படிந்திருக்கின்றன. இதில் ஒரு குறையுமில்லை. ஆனல் மேல் நாட்டுப் பாணிகளையும் உத்திகளையும் பின்பற்றிக்கொண்டு 'ஒரிஜினல்' என்று தமக்கு முத்திரை குத்திக் கொள்வதுதான் வேடிக்கையானது.

'இது நாவிலே சரஸ்வதியின் தாம்பூல கடாட்சம் பெற்றவனே கவி என்று பொதுவாக இந்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யனும், முக்கியமாகத் தமிழனும் கொண்டிருக்கும் ஒரு குருட்டுக் கொள்கையில்.........' என்கிறார் தருமு. இந்தக் 'குருட்டுக் கொள்கை' தமிழனுக்கோ இந்தியனுக்கோ பிரத்தியேகமான ஒன்றல்ல. ஒரு காலத்திலே இதையொத்த கொள்கை உலகெங்கும் பரவியிருந்தது. பண்டைய கிரேக்க இலக்கியங்கள் இதற்குச் சான்று பகரும். பத்தொன்பதாம் நூற்றாண்டிலே ஆங்கில 'ரொமான்ரிக்' கவிஞர்களிடமும் இதையொத்த கொள்கை நிலவிற்று. தருமு சிவராமின் இத்தகைய கூற்றுக்களை நோக்கும்போது தமிழனாகப் பிறந்ததற்காக அவர் உள்ளூர வெறுப்புக் கொண்டிருக்கிறாரோ என ஐயுறவு கொள்ள வேண்டியிருக்கிறது.

'மேற்படி பத்திரிகைகளின் ('ரைம்', 'நியூஸ் வீக்') புத்தக மதிப்புரைகளின் தரம் இங்குள்ள இலக்கியப் பத்திரிகைககளின் ஆதர்சமாக விளங்குகின்றது என்பதும்......' இவ்வாறு இவர் கூறுவது உண்மையாயின் தமிழக இலக்கியப் பத்திரிகைகளின் மீது நாம் வைத்திருக்கும் மதிப்பு சற்று குன்றத்தான் செய்யும். இந்தப் பத்திரிகைகள் 'கெட்டித்தனமான' எழுத்திற்குப் பெயர் போனவை. ஆனால், கருத்தாழமான மதிப்புரைகளை இவற்றில் காண்பது அரிது. போயும் போயும் இவைதானா தமிழக இலக்கியப் பத்திரிகைகளுக்கு ஆதர்சமாக விளங்க வேண்டும்!

தனது கட்டுரையில் 'மௌனி விரோதம்' என்ற பதத்தினை சிவராம் கையாண்டிருக்கிறார். தமிழ் நாட்டைப் பற்றி எனக்குத் தெரியாது. ஆனால் ஈழத்தைப் பொறுத்தவரை நாம் மௌனியை அவரது எழுத்துக்கள் மூலமே தரிசித்திருக்கிறோம். இங்கு வழிபாட்டிற்கோ, விரோதத்திற்கோ இடமேயில்லை. ஏனெனில், எங்களுக்குச் 'செஞ்சோற்றுக் கடன்' களைத் தீர்க்க வேண்டிய நிர்ப்பந்தமேயில்லை. மௌனியின் எழுத்துத்தரும் தரிசனத்தை நாம் இன்னொரு சமயம் பார்ப்போம்.

இறுதியாக, கோணல் தான் நிமிர்வு என நினைத்துக்கொண்டிருக்கும்போது நிமிர்வு எல்லாம் அதற்குக் கோணலாகவே தெரியும். ★

மல்லிகை

புதிய சந்தா விபரம்

ஆண்டுச் சந்தா 7-00
தனிப்பிரதி -50
இந்தியா, மலேசியா 10-00



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு பூ உதிர்கிறது

க. நவம்

என்றும்போல இன்றும் நான் அடிக்கொருதடவை எங்கள் அலுவலக வாயிலூடாகப் பார்த்தபடியே இருக்கிறேன்.

தலைதெறிக்குமளவுக்கு வேலையிருந்தாலும், முழுவதற்கும் முற்றுப்புள்ளி வைத்துவிட்டு, தினமும் இதேநேரம் அவள் வரவுக்காக காத்திருப்பேன். அவள் வரப்போகின்றாள் என்றால் எனக்கு வேலை ஓடாது. அவள் வரவில் எனக்கு அவ்வளவு ஆவல்!

சுமார் இருநூறுயார் தூரத்தில் அதோதெரிகிறதே 'கொண்வென்ற்' அங்கு இரண்டுமணிக்கு அடிக்கும் மணியோசையுடன் கீழ்வகுப்பு மாணவிகள் 'கலாம் கிலாம்' என்று சத்தமிட்டுக் கொண்டு சிதறி ஓடுவதைக் காணலாம். அப்பொழுதே கட்டுக்கட்டாக விரித்தபடி என் மேசைமீது அடுக்கிவைத்திருக்கும் 'பைல்'களை நானும் மூடிக்கொள்வேன். எனது அலுவலக வீதியால் வரும் மாணவிகளுள் அவளைத் தேடுவேன்.

சியாமளாவுக்கு ஆறுவயது தான் இருக்கும். பார்ப்பதற்கு நெளிவு சுழிவுகளெதுவுமில்லாத பிளாஸ்ரிக் பொம்மை போல இருப்பாள். அவளிடம் மனதைக் கொடுப்பவர்கள் சுலபமாகத் திரும்பி வாங்கிக்கொள்ள முடியாது. அவளிடத்தில் மலர் போன்ற அத்தனை கவர்ச்சி.

அவளுடைய அப்பாவும் இதே கந்தோரில் என்னோடு வேலைபார்க்கும் சக இலிகிதர் தான். நாகரிகத்தின் உச்சிப்படிகளில் வாழ்பவர். நாகரிக சமுதாயத்தின் ஒரு அங்கமென்றே அவரது குடும்பத்தைப்பற்றிச் சுருக்கமாகச் சொல்லிவிடலாம். தனது இலட்சியத்தின் சின்னமாக சியாமளா வளர வேண்டும் என்று சதா அங்கலாய்ப்பவர். அவர். எல்லாவற்றிலும் சகல சுதந்திரத்தையும் அளித்து அவளை மிகவும் செல்லமாக வளர்க்கிறார்.

பாடசாலை முடிந்ததும் தன் அப்பாவைத் தேடித் தினமும் இங்கு வருவாள், சியாமளா. மூன்றரை மணிக்கு வேலைமுடிந்ததும், அவருடன் சயிக்கிளில் ஏறிக்கொண்டு வீட்டுக்குப் போய்விடுவாள். அவள் கந்தோருக்குள் வந்துவிட்டாளென்றால் போதும், எனது வேலைகளை மூடிவைத்து விடுவேன்.

தோளிலே புத்தகப்பையை தொங்கவிட்டுக்கொண்டு, துள்ளித் துள்ளி நடந்து வந்துகொண்டிருக்கும் அவளைத் தூரயிருந்தே என்றால் அடையாளங் கண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொள்ள முடிகிறது. நான் அவளைக் கவனிக்காதவன் போல ஒரு பைலை எடுத்து விரிக்கிறேன். ஏதோ கடின வேலையில் ஈடுபட்டிருப்பவன் மாதிரி பைலுக்குள் முகத்தை புதைத்தபடி நடிக்கிறேன்

எனது மேசைக்கு அருகே தொப்புத்தொப்பென்று வெள்ளைச் சப்பாத்தின் சத்தம் கேட்கிறது. தன்வரவை நான் கண்டு கொள்ளாவிட்டாலும் காதுகளுக்காவது தெரிவிக்கவேண்டும் என்ற நினைப்பு அவளுக்கு.

நான் தலைதூக்கவில்லை.

'மீசை மாமா ........ நான் ஸ்கூலாலே வந்துட்டேன் ......' தன் அப்பாவிடம் போகுமுன் என்னிடம் வந்து இப்படித்தான் வந்தனம் கூறிக்கொள்வாள். என்னுடைய மாப்போசி மீசையில் எப்பொழுதும் அவளுக்கு ஒரு சொட்டை.

நான் அப்போதுதான் அவளைக் கண்டுகொண்டவன் போல கண்களை அகலவிரித்து விழிக்கிறேன். பூப்போன்ற மென்மையான தன் பிஞ்சுக் கைகளை அசைத்தபடியே என்னைப்பார்த்துக் கண்சிமிட்டி நிற்கிறாள், அவள் நான் தோற்றுவிட்டேன்; தொடர்ந்து என்னால் நடிக்கமுடியவில்லை. அவளுடைய களங்கமற்ற புன்சிரிப்பைப் பார்த்த கணமே நான் ''கிளுக்' கென்று சிரித்துவிட்டேன். கதிரையைவிட்டுப் பாய்ந்தோடி அவளைப் பிடித்துக்கொண்டேன். செல்லமாக அவளுடைய காதைப்பிடித்துத் திருப்பினேன்.

'மீசைமாமா, மீசைமாமா எண்டு, என்னைக் கூப்பிடக் கூடாதெண்டு சொன்னேனல்லவா? இனி எப்பவாவது அப்படிச் சொல்லுவியா?'

இரண்டு காதுகளிலும் பிடித்து அவளுடைய தலையைச் சூரனுட்டினேன்.

'ஊகும்...... வுடுங்கமாமா நீங்க இப்பிடிக் காதிலை நோவ நோவ கிள்ளினு உங்களைத் தும்புக்கட்டை மீசைமாமா எண்டு தான் சொல்லுவேன்'

செல்லமாகச் சிணுங்கினுள் சியாமளா. அவளை வாஞ்சையோடு அள்ளி அணைத்துக் கொண்டேன்.

நான் இந்த அலுவலகத்துக்கு மாற்றலாகி வந்து மூன்று வருடங்களாகிவிட்டன. மிகப் பெரிய கல்விப் பிரந்திபத்தின் ஒரேயொரு அலுவலகம் இது. இங்கு தினம் தினம் புதுப் புது பிரச்சினைகள் புனர்ஜென்மம் எடுத்தபடியே இருக்கும் இங்கு வரும் ஆசிரியர்கள் ஒவ்வொருவரிடத்தும் ஏதோ ஒரு பிரச்சினை இருப்பதனுலோ என்னவோ எப்போதும் களை இழந்த முகங்களையே நான் தினமும் காண்கிறேன். எனக்கும்கூட அலுவலகத்தை விட்டு வெளியேறும் வரை முகத்தில் விடிவு இடையாது. இந்த இயந்திர வாழ்க்கையில் சியாமளாவுடன் சிரித்து மகிழும் சொற்ப நேரந்தான் எனக்கு ஒரு மன நிறைவு ஏற்படுவதை நான் உணர்கிறேன். அவளைப் பேசவிட்டு அவளது மழலை மொழியையும் அபிநயங்களையும் அலுக்காமல் இரசிப்பதில் எத்தனை இன்பம்! வளைய வளைய வந்து என்னோடு வலுச்சண்டை பிடிப்பது அவளுக்குச் சலிக்காத விளையாட்டு. அவள் என்னை எப்படி ஏசினுலும் அவளது வார்த்தைகள் எனக்கு இனிப்பான சக்கரைதான்.

'சியாமளா, இன்றைக்கு நீ அப்பாவோடை வீட்டுக்குப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போகவேண்டாம். என்னோடு தான் வரவேணும். நான் எங்க வீட்டுக்கு உன்னைக் கூட்டிப் போறன்'

'நான் உங்கவீட்டுக்கு வர மாட்டேன். என்னை அப்பாக் கிட்ட போக விடுங்க மாமா...'

என் கைகளினின்றும் திமிறினள். சியாமளா. கைகளை விலக்கிக்கொண்டு தன் அப்பாவின் மேசையை நோக்கி ஓடினாள். ஓடியவள் ஏதோ நினைப்பு வந்தவளாக இடையில் திரும்பி என்னிடமே மீண்டும் ஓடிவந்தாள். என்னைச் சற்றுத் தூரத்தில் நின்றுபார்த்துச் சிரித்தாள். அந்தச் சிரிப்பில் என்றுமில்லாத சந்தேகம் கலந்த குறும்புத்தன்மையும், இதுவரை அவளிடத்தில் காணாத களங்கமும் பின்னிப் பிணைந்து மின்னிமறைவதை காண்கிறேன்.

'என்ன அப்பிடிப் பார்த்துச் சிரிக்கிறாய் சியாமளா?' என்ற பாவனையுடன் அவளையே பார்த்தபடி பதிலுக்குச் சிரிக்கிறேன். என் சிரிப்பிலும் ஒரு வரட்சி.

'உங்களைப்பற்றி ஒரு விசயம் மாமா...... நீங்க சரியான ஆள் மாமா......' கன்னத்தில் குழி விழச் சிரித்தவள், முகத்தை இருகைகளுக்குள்ளும் ஒருமுறை புதைத்துத் தலைநிமிர்ந்தாள். எனக்குப் பெரிய வியப்பு! இவளிடத்திலும் பெரிய மனிதத் தோரணையில் ஒரு நாணமா!!

'சியாமளா, இங்கு வா. என்னைப்பற்றி என்ன கேள்விப் பட்டாய் சொல்லு?' அவளது கையை எட்டிப் பிடிக்கத் தாவினேன். என் கைக்கு அகப்படாமல் விலகிக் கொண்டே,

'நான் சொல்லமாட்டேன் எனக்கு...... அதைச்சொல்ல... வெக்கம் வருது மாமா.........'

சொல்லிக்கொண்டு அவள் அப்பாவின் மேசையை நோக்கி ஓடிவிட்டாள்.

அவளை அப்படியே தூக்கிக் கொண்டு வந்து என்னுடைய கதிரையில் உட்காரவைத்து அவளோடு ஏதோ பேசவேண்டும் போலிருந்தது, எனக்கு. என்னைப்பற்றிய செய்தி அவள் அறிந்து வெட்கப்படுமளவுக்கு காதில் பட்டிருக்கிறதே! அது என்னவாக இருக்குமோ! என்று எனக்குள்ளேயே பலதடவை திரும்பித் திரும்பிக் கேட்கிறேன். அவளிடமிருந்து அதைக் கேட்டறிய வேண்டும் என்ற ஆவல் விநாடிக்கு விநாடி அதிகரிக்கிறது.

அவள் திரும்பவும் தானாகவே என்னைத் தேடி வருவாள் என்று எனக்குத்தெரியும். ஏதோ ஒரு பைலைத் திறந்து வைத்தபடி ஒவ்வொரு பக்கமாகக் கண்களை மேயவிட்டுக் கொண்டிருந்தேன்.

சியாமளாவின் காதுக்கு எட்டக்கூடிய அளவுக்கு என்னை பற்றி கதை அடிபடுகிறதா. அப்படி நான் என்னதான் செய்துவிட்டேன்? நெஞ்சில் என்னை அறியாமலே ஒரு படபடப்பு?

நான் நினைத்தது தவறவில்லை. சியாமளா மீண்டும் பூனைபோலப் பதுங்கிப் பதுங்கி என்னுடைய மேசையருகே வந்து நிற்கிறாள். 'லபக்'கென அவளை எட்டிப் பிடித்துக்கொண்டேன்.

எப்படியாவது அவளது வாயிலிருந்து அந்த விஷயத்தைப் பிடுங்கி விடுவோம் என்று நான் பட்ட பாடு!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'எனக்கு வேக்கம் வருது மாமா...... நான் சொல்லமாட்டேன். என்னை விடுங்கமாமா...'

அப்பப்பா இவள் பொல்லாத பிடிவாதக்காரி.

'சியாமளாக் குஞ்சு, மாமாக்கு நீ அந்தக் கதையை இப்ப சொன்னா 'சொக்லேற்' வாங்கித்தருவேன். வேணும்டா சொல்லு. இல்லாட்டில் தரமாட்டேன். போ.....'

முகத்தைக் கோவம்போலக் காட்டிக்கொண்டேன். ஆனாலும் அவளைப் பிடித்த கையை விட்டுவிடவில்லை.

'நான் சொன்னா ஒரு சொக்ளேற் தருவீங்களா மாமா?'

'ஒண்டல்ல, ரெண்டு வாங்கித் தருவேன்'

'நீங்க பொய் சொல்ல மாட்டீங்கதானே......'

'சத்தியமா வாங்கித்தருவேன்...... சொல்லு'

சியாமளா மீண்டும் பச்சையரிசிப் பல்லுத் தெரியச் சிரிக்கிறாள். அவளுக்கு என்னைக் கண்டு சிரிப்பை அடக்க முடியவில்லை.

'மாமா உங்க காதைக் காட்டுங்க.........'

என்கழுத்தை தன் மெல்லிய கரங்களால் கட்டிப்பிடித்துக் கொண்டு, காதுக்குள் இரகசியம் பேசுகிறாள்.

'நேத்து மாமா...... நாங்க ஸ்கூலிலே தண்ணிகுடிக்கிற பைப் இருக்குத்தானே மாமா......... அதிலே நான் நிண்டனான். அப்ப அதோ தெரியுதே, அந்த வீட்டுச் சாந்தியக்காவும் இன்னொரு அக்காவும் என்னைக் கூட்டிப் போய் தான் தாற கடிதத்தை உங்களுக்கு கொண்டுவந்து குடுப்பியா எண்டு கேட்டாங்க .....'

எனக்கு நாடி வேகமாகத் துடிக்கிறது.

'நீ என்ன சொன்னாய் சியாமளா?'

'நான் ஓமெண்டு சொல்ல, அவங்க கடிதத்தை இன்னொரு நாளைக்கு தாறதெண்டிட்டுப் போயிட்டாங்க'

அப்பாடா மூச்சு விட்டுக் கொண்டேன்.

'ஏதாவது கதைப்புத்தகம் அனுப்பிவிடுங்கள் எண்டு எழுதித் தரப்போகினமாக்கும்' என்று சொல்லிச் சமாளிக்க முயற்சித்தேன்.

'இல்லை... ... எனக்குத் தெரியும்......... நீங்க பொய் சொல்றீங்க மாமா......'

'என்ன தெரியும் சொல்லேன் சியாமளா'

'சொல்லட்டுமா......'

'ம்.. சொல்லுபாப்போம்!'

'சாந்தியக்காவுக்கும் உங்களுக்கும் லவ்'

என் தலைமேல் இடியொன்று விழுகிறது. இந்தப் பிஞ்சா இப்படிப் பேசுகிறது? என் மனநிலையைக் கட்டுப்படுத்திக் கொண்டு கேட்கிறேன்.

'லவ் எண்டா என்ன சியாமளா?'

'ஹூம்...... எனக்குத் தெரியும். சொல்லமாட்டன்'

'எப்பிடித் தெரியும் உனக்கு.........?'

'எங்க அப்பாவும் அம்மாவும்.........!'



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தரையில் விழுந்த தாம்பாளம் போல அவள் சிரிப்பொலி அலுவலகமெங்கும் பரவியது. எல்லோரது அமைதியையும் அவளது சிரிப்பு கலைத்துவிட்டது.

எட்ட விலகிநின்று என்னைப் பார்த்துக் கைகொட்டிச் சிரித்தாள், சியாமளா. என்னை நன்ருக வெக்கப்படுத்தி விட்டதாக நினைத்து விழுந்து விழுந்து சிரித்தாள். வெற்றிப் பெருமிதம் அவள் முகத்தில் முத்திரையிட்டிருந்தது.

நான் சிரிக்கவில்லை. அனுதாபத்துடன் அந்தப் பிஞ்சு முகத்தைப் பார்த்தபடி இருக்கிறேன். சியாமளா என்ற இந்தப் புனிதம் எப்படி அழிந்தது? முதிர்ந்த மனங்களின் மாசு எப்படிப் படிந்தது? குழந்தையும் தெய்வமும் குணத்தால் ஒன்றுபடுகிருர்கள் என்பார்கள். இன்றைய நவநாகரிகக் குடும்பங்களில் இந்தத் தெய்வங்கள் சிரழிக்கப்படுவதை உணர்ந்து கொள்ள முடியாமல் ஏன் கும்மாளமடிக்கிருர்கள்?

சமூகத்தில் பிஞ்சாகிக் காயாகிப் பின்னர் பழமாக வளரவேண்டிய பூ அல்லவா இது! விடுவிக்க முடியாத புதிரைப் பார்ப்பவன் போல என் பார்வை சியாமளா மீது குத்தி நிற்கின்றது.

அடுத்த கணம் அவளது முகத்தில் ஒரு திடீர் மாற்றம் ஏற்பட்டதை நான் அவதானிக்கிறேன். இப்போது அவள் முகத்தில் அன்றலர்ந்த மலரின் மென்மையில்லை, பச்சைப் பசும்பாலின் தூய்மை இல்லை; மழலை தரும் இளகிய இளைய மகளின் சாயலில்லை. என்னை ஆட்கொண்ட இவை அனைத்தும் எங்கோ ஓடி ஒழிந்து. குழந்தை உருவத்தில் குமரி உணர்வுகளைப் புரிந்து கொள்ளத் தகுந்த நவீன வார்ப்பாக அவள் தோன்றுகின்ருள்.

'மாமா... மாமா... நான்...'

சியாமளா எதையோ எண்ணிப் பயப்படுகிருள். எங்கே அவள் அழுதுவிடுவாளோ என்று எண்ணுமளவுக்கு அவளது முகம் விகாரமாயிற்று.

'சியாமளா இதுக்கேன் நீ இப்படிப் பயப்படுகிருய்?' அவளைத் தொட்டுத் தீண்டாதபடியே கேட்கிறேன்.

'மாமா இந்தக் கதையை நான் உங்களிட்ட சொன்னேனெண்டு, அப்பாவுக்கு சொல்ல வேணும் மாமா. அப்பாவுக்குத் தெரிஞ்சா அடிப்பாரோண்டு, பயமாயிருக்கு'

அழாக் குறையாக என்னையே அண்ணுந்து பார்த்துக் கொண்டிருந்தவளின் விழிகளை நான் உன்னிப்பாக நோக்குகிறேன். இத்தனை நாளும் நான் பேசிப் பழகிக் கொஞ்சி விளையாடிய சியாமளாவின் கெட்டியான உருவம் ஒளிமங்கிப் போகின்றதோ என ஒருகணம் துணுக்குற்றேன். உச்சிமுதல் உள்ளங்கால் வரை அவளை வெறித்துப் பார்க்கிறேன்.

பாலுக்குள் சிறிதளவு நீர் கலந்தாலும் பார்வைக்கு பசுமையான வெண்ணிறத்துடன் தான் இருக்கிறதே!

சியாமளா தன் அப்பாவின் மேசையை நோக்கி ஓடிக்கொண்டிருக்கிருள்.

ஓ, அவள் என்னைவிட்டுத் தூர ஓடிக்கொண்டிருக்கிருளோ!

★



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்க வானமாமலை!

கார்த்திகேசு சிவத்தம்பி

தை மாதத் தாமரை இதழில், திரு. நா. வானமாமலை அவர்கள் 55-ஆவது வயதினை யடைந்துள்ளார் என்ற செய்தி வெளியாகியுள்ளது.

அறுபதாவது வயதே விழாக் காணும் வயதெனப் பாரம்பரியமாகக் கொள்ளப் படுவதெனினும், திரு. வானமாமலை அவர்களது சேவையின் தனித்துவத்தையும் பூரணத்துவத்தையும் எடுத்துக்கூறவும், கூறி மகிழ்ந்து கொள்ளவும், அவரது எந்தப் பிறந்தநாள் வைபவமும் பொருத்தமானதாகவே அமையும் என்ற நோக்குடன் இச் சிறு குறிப்பினை வரைகின்றேன். இன்னும் ஐந்து வருடகாலம் தாழ்த்தியே வாழ்த்தப்பட வேண்டிய அளவுக்கு வானமாமலை அவர்களது சேவை இன்று குறைந்தது அன்று; இன்று வாழ்த்தக் கூடிய அளவுக்கு நிறைவான அவர் புகழ் 1978-ல் வாழ்த்த வேண்டிய அளவுக்கு வளரப் போவதும் செழிக்கப்போவதும் திண்ணம, உண்மை.

திரு. நா. வானமாமலை அவர்கள் இன்றுள்ள தமிழ் எழுத்தாளர்களுள் முக்கியமானவர். தமிழாராய்ச்சி அறிஞர்களுள் பின்பற்றப்பட வேண்டியவர்.

அரசியல், இலக்கியம், கலை, சமூகவியல், சமூகமானிடவியல், கிராமியக் கலைத்துறை ஆகிய துறைகளில் அவர் எழுதுபவை எழுத்தாளர்களாலும் அறிஞர்களாலும் வரவேற்று வாசிக்கப் படுபவை என்பது யாவரும் அறிந்த உண்மையே. அவரது கட்டுரைகளும் நூல்களும் அவரது அறிவுத்திறனையும் வியாப்தியையும் எடுத்துக்காட்டுவனவாக அமைந்துள்ளன. அவர் பதிப்பித்து வெளியிடும் சஞ்சிகையான 'ஆராய்ச்சி' யோ, தற்காலத் தமிழாராய்ச்சி வளர வேண்டிய நெறிமுறையினை எடுத்துணர்த்தி நிற்கின்றது.

வானமாமலை அவர்கள் மார்க்சியவாதி. இலக்கியம், கலை, வரலாறு பற்றிய அவர் நோக்கு இயக்கவியற் பொருள் முதல் வாதத்தையும் வரலாற்றுப் பொருள் முதல் வாதத்தையும் ஆதார சுருதியாகக் கொண்டது.

உலக அரங்கில் இன்று, பொதுவாக ஆராய்ச்சித்துறை முழுவதிலும், சிறப்பாக மனிதவியற்றுறை ஆராய்ச்சியில், இந்நோக்குநெறி, புதிய பரிமாணங்களை ஏற்படுத்தி பயில்துறைகளை ஆழமாகவும் அகலமாகவும் விரியச் செய்துள்ளது. மன்னர் வரலாருகவே இருந்த வரலாற்றுத்துறை சமுகவரலாறு, பொருளாதார வரலாறு எனக்கிளைத்து வளருவதற்கு மார்க்சிஸ சித்தாந்தமே காரணமாகவமைந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மார்க்சீஸ சிந்தாந்தத்தின் அரசியல் முடிபுகளை ஏற்றுக் கொள்ளாத அறிஞர்களும், அச் சித்தாந்தம் காட்டும் ஆய்வு முறையினையும் நோக்கு நெறியினையும் ஏற்றுக் கொண்டுள்ளனர். வரலாற்றுத் துறை ஆராய்ச்சிகளை அறிந்தோருக்கு இவ்வுண்மை தெரியும். மனிதவரலாறு, முன்னேற்றம் பற்றிய முழுமையான நோக்கினைப் பெறுவதற்கு இச் சித்தாந்தங்கள் காட்டும் வழிமுறையினை அறிஞர்கள் ஏற்றுக் கொண்டுள்ளமை முடிந்த முடிபெனலாம். சிலர் அதனைத் தெரிந்து ஏற்றுக் கொள்கின்றனர், பலர் தெரியாமலே ஏற்றுக் கொண்டுள்ளனர்.

தமிழாராய்ச்சியைப் பொறுத்தமட்டில் (பொதுவில் இது இந்தியவியலாராய்ச்சிக்கும் பொருத்தமானதாகும்) இந்நோக்கு புதிய திருப்பங்களை ஏற்படுத்துவதாகவுள்ளது. இலக்கியம், வரலாறு, கலை, வாய்மொழிப் பாரம்பரியங்கள், சமூக மானிடவியல் என்பனவற்றை, ஒன்றுடன் மற்றது சம்பந்தமற்றது என்ற முறையில், தனித்தனியே வைத்து ஆராயாது, முழுமையான வரலாற்றைப் பெறுவதற்கான கிளைத் துறைகள் என்ற நோக்குடன், இணைத்து நோக்கவேண்டிய தேவை ஏற்படுகின்றது. ஏனெனில் இவைகள், இத் துறைகள் யாவும் ஓரளவில் வரலாற்று மூலங்களாகவேயமைந்துள்ளன. எனவேதான் இயக்கவியல் பொருள் முதல் வாத, வரலாற்றுப் பொருள் முதல் வாத நோக்குடன் இந்திய வரலாற்றை ஆராயும் அறிஞர்கள் யாவரும் மேற்கண்ட ஆய்துறைகள் யாவற்றையும் ஒன்றாக இணைத்து நோக்குகின்றனர். கோசாம்பி, தேசப்பிரசாத் சட்டோபாத்யாய போன்றோரின் ஆராய்ச்சிகள் எமக்கு இவ்வுண்மையை நன்கு உணர்த்துகின்றன. வானமாமலை அவர்களும் அவ்வழியே சென்று, தமிழாராய்ச்சியைப் பொறுத்தமட்டில் புதியதொரு பாதையினை வகுத்து வருகின்றார்.

மார்க்சிய நோக்கை உள்வாங்கிய அறிஞர்களைப் பொறுத்தமட்டில், பிற ஆராய்ச்சியாளர்களால் தனித் தனித் துறைகளாகக் கொள்ளப்படும். இலக்கியம், இலக்கியவரலாறு, வாய்மொழிப் பாரம்பரியம், புதைபொருள் ஆய்வியல், மொழிநூல், பத ஆய்வியல் போன்றவை, உண்மையான வரலாற்றுக்கு வேண்டிய மூலங்களாகிவிடுகின்றன. கிரேக்க வரலாற்றினை இம்முறையில் எழுதி இதற்கு வழிகாட்டினார் பேராசிரியர் ஜோர்ச் தொம்சன். இந்திய வரலாற்றுத் துறையில் கோசாம்பி எழுதியுள்ள **An Introduction to the study of Indian History** (இந்திய வரலாற்றாய்வுக்கான அறிமுகம்) என்ற ஆங்கில நூல் இந்த ஆய்வு முறையினை எடுத்துக் காட்டி நிற்கின்றது.

இந்தச் சித்தாந்த நெறிப்படி தமிழ் வரலாற்றையும், தமிழ் நாட்டு வரலாற்றையும் நோக்க முனையும் பொழுது மேற்சொன்ன துறைகள் யாவற்றையும் தனித் தனியே ஆராய்வதுடன் அவற்றை இணைத்து நோக்கும் திறனையும் வளர்த்தல் வேண்டும்.

வானமாமலை அவர்கள், இலக்கியம், நாட்டுப்பாடல்கள், மதஞானம், மானிடவியல், ஆகிய பல துறைகளில் ஈடுபடுவதற்கு இதுவே காரணமென்பது எனது அபிப்பிராயமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழக வரலாற்றை முற்றுமுழுதாக அறிந்து கொள்வதற்கு இத்தகைய அகலமான, அதே வேளையில் ஆழமான நோக்குத் தேவைப்படுகின்றது. தென்னிந்தியப் பல்கலைக் கழகங்களிற் கடமையாற்றும் தமிழ் வரலாற்றுராய்ச்சியாளரிடையே இந் நோக்கு நெறி காணப்படாதது விசனிக்கத்தக்க ஒன்றாகும். வானமாமலை அவர்கள் செல்லும் நெறியிற் செல்பவருள் தொ.மு. சிதம்பரரகுநாதன் முக்கியமானவர். ஆனல் அவர் ஆக்க இலக்கியகாரராகவுமிருப்பதால் அவரது வரலாற்று மூர்த்திகரம் இன்னும் பூரணமாக உணரப்படவில்லையென்றே கூறல் வேண்டும்.

இவ்வாறு முழுமையான நோக்குடன் ஆராய்ச்சியில் இறங்கும்பொழுது, கிளைத்துறைகள் வளமடைவது இயல்பே. வானமாமலை அவர்களால் தமிழ் நாட்டுப் பாடற்றுறையும் சமூக வரலாற்றுத்துறையும் நன்கு வளர்ந்துள்ளன. மன்னர் நிலைப்பட்ட தமிழ்நாட்டு வரலாற்றை மக்கள் நிலைப்பட்டதாக மாற்றுவதில் வானமாமலை அவர்களுக்கு முக்கிய இடமுண்டு. உலகத் தமிழாராய்ச்சி மாகாநாடுகளில் வாசிக்கப்பெற்ற அவரது கட்டுரைகள் இத்துறையில் மிக மிக முக்கியமானவை. (The Folk Motif in Silappathikaram, a study of the Historical Ballads in Tamil, Consolidation of Feudalism and anti-feudal struggles in during Cola Imperialist rule) என்பன சிறந்த ஆராய்ச்சிக்கான நல்ல எடுத்துக்காட்டுகள்.

வானமாமலை அவர்களது தனிப்பட்ட ஆராய்ச்சித் திறனையும் ஆராய்ச்சி நோக்கையும் நிறுவனரீதியாக அமைத்து இத்துறையில் மேலும் பலரை ஆற்றுப்படுத்துவதற்கு உதவுவது 'ஆராய்ச்சி' என்னும் அவரது சஞ்சிகை. இன்றைய தமிழாராய்ச்சிக்கு, இதுவரை வெளிவந்துள்ள பத்து ஆராய்ச்சி இதழ்களும் இன்றியமையாத உசாத்துணைக் கருவூலமாகும்.

தமிழகத்தில் புதுநோக்கும் பரந்த அறிவும், ஆழமான சிந்தனையுமுடைய ஒரு புதிய ஆராய்ச்சியாளர் பரம்பரையை வளர்ப்பதற்கு 'ஆராய்ச்சி' உதவுகின்றது. ஆராய்ச்சியைப் பல்கலைக்கழகங்களின் முதுசமாகப் பேணும் தமிழக நிலையினைத் தகர்த்தெறிந்துள்ளது இச்சஞ்சிகை. அத்துடன் தமிழகத்துப் பல்கலைக்கழக ஆராய்ச்சியாளர் பலரின் (கேரளம் இதற்குள் வராது) ஆராய்ச்சியாழமின்மையையும் அது மறைமுகமாக எடுத்துக்காட்டி வருகின்றது.

வானமாமலை அவர்கள் வாழும் ஈழத்திலக்கியத்தின் நண்பன். ஈழத்தில் தமிழாராய்ச்சியில் ஈடுபட்டுள்ளவர்களை ஊக்கப்படுத்துவதிலும், அவர்களுடன் இணைந்து தொழிற்படுவதிலும் விசேட ஆர்வம் காட்டுபவர்.

வானமாமலை அவர்கள் வாழ 'ஆராய்ச்சி' வாழும். 'ஆராய்ச்சி' வாழ வானமாமலை அவர்கள் வாழ்வார். வளர்வார்.

முருகனை வாழ்த்தி வணங்கும் பக்தனொருவன் அவனது வேலை வாழ்த்தியது போல், நாமும் வானமாமலை அவர்களது அறிவாயுதமான ஆராய்ச்சி வாழ்க என வாழ்த்துவோம்.

'வெற்பைக் கூறுசெய்
தனிவேல் வாழ்க'!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ‘இன்று’

‘கௌதாரி’

தமிழகத்திலே எழுபதாம் ஆண்டினை அடுத்து இலக்கியத்திலே சலசலப்புக்கள் தோன்ற ஆரம்பித்துள்ளன; சலசலப்புக்களுக்குப் பெருமளவுக்குப் பின் உந்து சக்தியாக, அடி நிலை நீர் ஓட்டமாக ஓடிக்கொண்டிருக்கும் பொருளாதார முரண்பாடுகள் வெளிச்சமாகச் செயல்படவில்லை ஆனால் மறைமுகமாக இந்தப் பொருளியல் முரண்பாடுகளே வேலைசெய்கின்றன. ஆனால் இதனை, சலசலப்பை ஏற்படுத்த முயலும் சில வட்டங்கள் உணர்ந்ததாகவும் தெரிகிறது. பலர் அதனை உணராமலே சமூக எதிர் மறைக்கண்ணோட்டத்தில் இலக்கிய சேவையாற்ற முன் வந்துள்ளனர்.

இந்நெறிகளில் இயங்கும் சில நபர்களைக் கொண்ட வட்டங்கள் சிறு பத்திரிகைகளுக்குரிய பலமும், பலவீனமும் உடைய சிறு பத்திரிகைகளை வெளியிட்டு வருகின்றன. சில பத்திரிகைகள் ‘ஆகுதிப்’ பொருளை நம்பி இலக்கிய யாகம் செய்ய முன்வந்துள்ளன. விற்பனைக்கல்ல — ரசனையாளர்களுக்கு மட்டும் எனக் கிளம்பும் இப்பத்திரிகைகள் அதி சிறுபான்மை இலக்கிய உணர்வின் வெளிப்பாட்டினைப் பண்பாகக் கொண்டதால் இலக்கிய ஏட்டின் சுற்றோட்டம் மிகவும் குறுகிவிடுகிறது. எனவே, இவை அச்சில் தம் எழுத்தைக் கண்டு ஆத்ம திருப்தி கொள்ளும் திருக்கூட்டத்தின் வெளிப்பாடாகக் காணப்படுகின்றது எனக் கூறுவதும் பொருத்தமுடையதாகும்.

இவ்வழியிலே வானம்பாடியைப் பின்பற்றி திருச்சிராப்பள்ளியில் இருந்து ‘இன்று’ என்ற பத்திரிகை சென்ற வருட இறுதி மாதத்தில் வெளிவந்துள்ளது. சென்ற வருடத்தைவிட ‘இன்றைய’ வருடமான எழுபத்திமூன்றில் ‘இன்று’ எதையும் சாதித்துவிடுமா என்பதை அதன் ஆக்கங்களை நின்று நிதானித்தே கூறுவது பொருத்தமுடையதாகும். எனினும் முதல் ஏற்பாட்டைப் பார்த்துச் சில வற்றினைக் கூறுவதும் தவறு இல்லையென்றே எண்ணுகிறேன்.

இச்சஞ்சிகை மத்தியதர வர்க்கத்தினரின் முயற்சியினால் வெளிவந்துள்ளது. இதற்கு ஏற்ற முறையிலே ‘நினைத்துப் பாருங்கள்’ என்ற பகுதி அமைகிறது அதிலே கூறப்பட்ட முக்கியமான சில வரிகள்: ‘ஒரு பத்துப்பேர் சேர்ந்து நாம் மாதந்தோறும் ஒரு வெளியீட்டைக் கொண்டுவந்தால் என்ன என்று உரத்துச் சிந்தித்தார்கள்.

‘இந்தப் பத்துப்பேரும் மாதக்கூலி பெறுகின்றவர்கள்’

‘இன்றுக்குக் கட்சியில்லை. Colour இல்லை; சதுரங்கள் இல்லை. இதைப்பற்றிய எதிர் காலத் திட்டங்கள் எதுவுமில்லை’ என்பதே அவர்களது வீறார்ந்த பிரகடனமாகும்.

கோ. ராஜாராம், சௌரி, தேவகோட்டை வா. மூர்த்தி ஆகியவர்களது புதுக்கவிதைகள் வாசிப்பதற்கு அலுப்புத் தட்டவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

‘அறுந்த செருப்பை
இழுத்து மேலும்
கிழித்துப் பார்த்த பின்..
‘நாலணு ஆவும் சார்’
என்றுன் கறுப்பன்
வயிற்றின் பசி
ஆணியடிக்கும்
வலியில்’

என்ற மெல்லிய சமூக உணர்வுப் புதுக்கவிதையிலும்பார்க்க,

‘அவசரத் தேவையில்
மயக்கச் சூழலில்
மறந்திருந்த என்னை
மனைவி வைத்த ரேடியோ
ஞாபக மூட்டியது
நினைத்து எழுந்தேன்
நிரோத் எடுக்க’

என்ற பாங்கில் அமைந்த இணைவிழைச்சுத் துணுக்குப் புதுக்கவிதைகளே அதிகம்.

இணைவிழைச்சு ‘அதிகமாகப் போகின்ற போது நாம் சலித்துப் போகின்ருேம்’ என்று எஸ். சாமிநாதன் கூறுவதை ‘இன்று’ வெளியீட்டாளர்கள் கவனத்தில் இருத்திக் கொள்ளவும்.

‘மானுட
மயிலாட
மலர் சிரிக்க
முத்துப் பற்கள்
முழுவதையும் காட்டி
மங்கையவள் கண்கள்
சுழல் வீச்சாட’

என்று புதுக்கவிதை வரும்போது புதுக்கவிதையாளர் வெறுத்தொதுக்கிய சந்தக் குழிக்குள்— இசைத்தளைக்குள் போய்விழுகிறுர்கள் என்று கூறத்தோன்றுகிறது. பாடல் முறைக்கு புதுக்கவிதையாளர் நகருவது மாட்டுவாயா, கழுதைச் செவியா என்பதை அவர்களே தீர்மானித்துக் கொள்ளட்டும்!

‘திருச்சி வாசகர் அரங்’கில் திறனுய்வு செய்யப்பட்ட க. சுப்பிரமணியனின் ‘வேரும் விழுதும்’ என்ற நாவல் பற்றிய சிலரது கருத்துக்களும் ‘இன்று’வில் இடம் பெற்றுள்ளன. டில்லி இலக்கியப் பேச்சுக்கள் ‘கணையாழி’யில் இடம் பெறும் பாங்கிலே ஆங்கிலச் சொற்கள் இக்கருத்துக்களில் தாராளமாக உபயோகிக்கப்பட்டிருக்கிறது. இது. ‘ட்ரை ரீடிங் நாவல்’ ‘பாத்திர அமைப்பு செவ்வைபெறவில்லை’ ‘விடைகாண முயற்சி செய்யவில்லை’ போன்ற கருத்துக்களைத் தெரிவித்த ஆர். கோவிந்தராஜ் எஸ். ஆல்பெரட், எஸ். சாமிநாதன் ஆகியோரது கருத்துக்களில் இழையோடின.

இறுதியாக, ‘இன்று’ மேற்கூறிய இலக்கியச் சலசலப்பை ஏற்படுத்திய மற்றைய சஞ்சிகைகள்போல தனிமனித வெறுப்பைக் காட்டுவதற்கும், ஆளை, ஆள் திட்டும் நாய்கடி பூனைகடி நெறிகளுக்கும் இடம் கொடாது பொது நெறியிலே செல்லுமா என்பது சந்தேகத்துக்குரியதே. ‘சென்னையில் நான் அவருடன் கொஞ்சமேனும் பழகியிருப்பதால், மற்றும் சில உள் விவகாரங்களையும் அறிந்திருப்பதால், தான் தருமூ சிவராமு எழுதிய ‘கோணல்கள்’ என்ற அஃக்-இல் வெளிவந்த கட்டுரையை மறுத்தெழுதப் போவதாகப் பா. ரவிகுமாரன் கூறியுள்ளார். உள்விவகாரங்களில் போனல் இவர்கள் தொடங்கிய ஆள் தொகைக்குள் தான்- 10 பேர் என்ற அளவிற்குள்தான்-இலக்கியம் நின்றுவிட வழியேற்படும். இதுதான் தமிழக இலக்கியச் சலசலப்பு என்றுல் நிம்மதியாக ஏக்கப் பெருமூச்சொன்று விட வேண்டியதுதான்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெல்லை க. பேரன்
(பேட்டிகண்டவர்)



# மண்ணைக் கனியாக்கும் மனிதன்!

இ. கிருஷ்ணசாமி

---

வரண்ட சுவாத்தியப் பிரதேசமான யாழ்ப்பாணத்திலும் வளமான திராட்சைப் பழத்தினை உற்பத்திசெய்ய முடியும் என்பதைச் செய்கை முறையில் நிரூபித்து வரும் விவசாயி திரு. இ. கிருஷ்ணசாமி அவர்களின் இல்லத்திற்குள் நுழைகிறேன். உரும்பராய் சந்தியிலிருந்து கோப்பாய் வீதியில் உள்ள அவரது பாரிய பழத்தோட்டமும் அழகான நவீன மோஸ்தர் வீடும் கண்கொள்ளாக் காட்சியாகவிருந்தளிக்கின்றன.

எங்கள் மண்ணைப் பிழிந்து கனி எடுக்கும் உங்களை மல்லிகையின் சார்பில் சந்தித்து வாசகர்களுக்கு அறிமுகப்படுத்த விரும்புகிறேன் என்றதும் மிகவும் மகிழ்வோடு என் கேள்விகளுக்குப் பதிலையும் இடையிடையே திராட்சைச் செய்கைமுறை பற்றிய விளக்கங்களையும் கொடுத்தார் ஆரம்பத்திலேயே 'விளம்பரத்தை விரும்புவது என் கொள்கையல்ல. பத்தைச் செய்தால் அதை ஒன்றாகக் காட்டுபவன் நான்' என்று அடக்கத்தோடு பதிலிறுத்த இவரிடம் 'பரவாயில்லை. நானாகக் கேள்விப்பட்டேன் வந்தேன். விவசாயத்துறையில் புதிய முயற்சிகளிலும் ஆராய்ச்சிகளிலும் ஈடுபடுபவர்களை உற்சாகப் படுத்துவதும் மற்றவர்களையும் அவர்களைப்போல் பின்பற்றச் செய்வதுமே எங்கள் நோக்கம்' என்று அவருக்குச் சமாதானம் சொல்லிவிட்டுப் பேட்டியை ஆரம்பித்தேன்.

**கேள்வி** நீங்கள் எப்போது இத் திராட்சைப் பழச் செய்கையை ஆரம்பித்தீர்கள்? ஏன்?

**பதில்** 1961-ம் ஆண்டில் திருநெல்வேலியில் இருந்தபோது 3 பரப்புக் காணியில் பரீட்சார்த்தமாக ஆரம்பித்தேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதனால் எங்கள் நாட்டின் பொருளாதாரத்திற்கு எதிர் காலத்தில் நிறையப் பலன் உண்டு என்று நம்பினேன். 1966-ம் ஆண்டளவில் இடவசதிக்காகவும் பழச் செய் கையை விருத்தி செய்யும் நோக்குடனும் உரும்பராய்க்கு வந்தேன். இப்போது 6 ஏக்கர் காணியில் முந்திரிகைச் செடி வளர்க்கிறேன்.

**கேள்வி** நான் அறிந்தவரையில் யாழ்ப்பாணப் பகுதியில் நீங்கள் தான் கூடுதலான இடப்பரப்பில் முறையான ஆராய்ச் சிகளோடு பழச் செய்கையில் ஈடுபட்டு வருகிறீர்கள் என்று நம்புகிறேன். யாழ்ப்பாண மண்வளம் இதற்கு ஒத்து வருமா?

**பதில்** நிச்சயமாக. சிறப்பாகவே இருக்கிறது. மத்தியதரைச் சுவாத்தியம் உகந்தது. மழை எவ்வளவு அதிகம் இருக் கிறதோ அவ்வளவு நல்லதல்ல.

**கேள்வி** திராட்சைத் தோட்டச் செய்கையில் உங்களுக்கு மகிழ்ச்சி கரமான மறக்கமுடியாத அனுபவங்கள் உண்டா?

**பதில்** யாழ்ப்பாணப் பிரதேசத்தில் விவசாயம் படிக்கும் மாண வர்களும், போதனாசிரியர்களும் அடிக்கடி என்னிடம் ஆலோசனைகளுக்காக வருவார்கள். திராட்சைச் செய்கை யாழ்ப்பாணம் முழுவதும் பரவக்கூடிய வகையில் பரவ லாக நான் ஆலோசனைகளை வழங்கியிருக்கிறேன். வெளி நாட்டவர்களும் விவசாய ரீதியான சுற்றுலாக்களை யாழ்ப்பாணத்திற்கு மேற்கொண்டால் எப்படியாவது என் தோட்டத்தையும் பார்வையிட வருவார்கள். சமீ பத்திலும் பிரேசில், பிரித்தானியா ஆகிய இடங்களிலி ருந்து வந்திருந்தார்கள். கடந்த வருடம் பழக்குலைகள் காய்த்துக் குலுங்கிய காட்சியை ஜேர்மன் டெலிவிஷன் படப்பிடிப்பாளர்கள் இங்கு வந்தபோது மிகவும் அதி சயப்பட்டு, என்னிடம் அநுமதிபெற்று படம் பிடித்தார்கள். இவையெல்லாம் எனக்கு மகிழ்ச்சிகரமான அனுபவங்கள். அமைச்சர்கள் கொல்வின் ஆர். டி. சில்வா, இராஜபக்ச, கனிஷ்ட அமைச்சர் நவரத்தின ஆகியோர் என் இல்லத் திற்கு விஜயம் செய்தபோதும் என் முயற்சிகளை வெகு வாகப் பாராட்டினார்கள். மேற்கு நாடுகளில் பிரசித்தி பெற்ற திராட்சைப் பழச்செய்கை ஈழத்திலும் பரவுவ தையிட்டு அவர்களுக்கு நிறைய மகிழ்ச்சி.

**கேள்வி** உங்களுடைய தோட்டத்தில் செய்கை பண்ணும் திராட் சைப் பழங்களை எவ்வாறு சந்தைப் படுத்துகிறீர்கள்?

**பதில்** பிரதான சந்தை கொழும்புதான். அவ்வப்போது பழங் களைப் பாதுகாப்பாகக் கொழும்புக்கே ஏற்றி அனுப்பி விடுவேன். கூடுதலாக உற்பத்தி செய்து குறைந்த விலை யில் எல்லோருக்கும் கிடைக்கச் செய்யவேண்டும் என்ப பதுதான் என் ஆசை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேள்வி அனேகமாக யாழ்ப்பாணத்துத் திராட்சைப் பழங்கள் புளிப்புத்தன்மை உள்ளதாகச் சொல்லப்படுகிறதே! காரணம் என்ன?


பதில் ஆரம்ப காலத்தில் செய்கையாளர்கள் தரமான இனங்களைப்பற்றிய பூரண அறிவு இல்லாமல் புளிப்பு இனங்களையும் தருவித்து வளர்த்தார்கள். இப்போது வெளி நாடுகளின் சிபார்சினுல் நல்ல இனங்களை நடுகிருர்கள். இதனுல் தற்போது முன்னையைவிடத் தரம் கூடியுள்ளது. சிலர் பழங்களை மரத்தில் நன்கு பழுக்கவிடாமலே பிஞ்சாக வெட்டி விற்கிருர்கள். இதுவும் புளிப்புத் தன்மைக்கு ஒரு காரணம்.

கேள்வி பச்சை இனங்களாக இருந்தால் பழத்தை அறிவது எப்படி?


பதில் பழம் என்ருல் சாதாரணமாகப் பார்க்கும்போதே உள்ளே விதைகள் தெரியவேண்டும்.

கேள்வி உங்களுடைய தோட்டத்திலே பயிராகும் பழவகைகளில் சில இனங்களின் பெயர்களைக் குறிப்பிட்டுச் சொல்ல முடியுமா?

பதில் முக்கியமாக 4 இனங்களைச் சொல்வேன்.




அனப்- ஈ - சாகி



கபூல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஸ்ரெயில் புளு



செமிலோன்

இவற்றைவிட இன்னும் சில இனங்கள் என்னிடம் உள்ளன. அவற்றைப் பரிசோதனை நிலையில் வைத்திருக்கிறேன்.

கேள்வி அரசாங்கத்திடமிருந்து என்ன மாதிரியான உதவிகளை எதிர்பார்க்கிறீர்கள்?

பதில் திராட்சைச் செய்கையை அத்தியாவசியமான ஒன்ருக அரசாங்கம் இன்னும் கணிக்கவில்லை. வெளிநாடுகளுக்குப்போய் இது சம்பந்தமான ஆராய்ச்சிகளைச் செய்யவும் மேலும் படிக்கவும் விருப்பம். இதற்கு அரசு உதவினல் நல்லது. மேலும் இலங்கையில் 'வைன்' உற்பத்தி கிடையாது. இதற்கு அனுமதி தந்துதவ வேண்டும்.

கேள்வி வைனை உற்பத்தி செய்வதால் என்ன பிரயோசனம்?

பதில் வெளிநாட்டவர்களுக்கு வைன் முக்கிய அம்சம். வைனை நல்ல தரத்தில் தயாரித்தால் வெளிநாட்டிலிருந்து வரும் உல்லாசப் பிரயாணிகளின் மூலம் அந்நியச் செலவாவாணியை மிச்சம் பிடிக்க முடியும். அத்துடன் நோயாளர், பெலவீனர்கள், குழந்தைகளுக்கும் இது முக்கிய வைத்திய உணவாகப் பயன் படுகிறது. மேலும் வைன் செய்யத் தொடங்கிவிட்டால் பழங்களை உடனே கொழும்புக்கு அனுப்பத் தேவையில்லை. பழம் அதிக நாட்களுக்கு இருக்காது. 'வைன்' காலங்காலமாக இருக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கேள்வி** வெங்காயம், மிளகாய் உற்பத்தி செய்வதை விடுத்துத் திராட்சைப்பழம் உற்பத்தி செய்வதைப்பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

**பதில்** இப்போது விவசாயிகள் புகையிலைச் செய்கையைக் குறைத்து வெங்காயம் மிளகாயைப் பயிரிடுவது உண்மை தான். ஆனால் இவையெல்லாம் ஒவ்வொரு போகப் பயிர் களே. மேலும் வீட்டுக் காணிகளில் பொழுது போக்கா கத் திராட்சைக்கொடி படரவிடுவதே நல்லது. நல்ல வருமானமும் கிடைக்கிறது. ஒரு திராட்சைக் கொடி சுமார் 30 — 40 வருடங்களுக்கு நிலைத்து நிற்கக்கூடியது. வெங்காயம், மிளகாய் அப்படியல்ல. மேலும் யாழ்ப் பாணத்திலும் சில சில பகுதிகளில்தான் திராட்சை நன் ருக வருகிறது. இந்த வாய்ப்பை நாம் பயன்படுத்த வேண்டும். எமது நாட்டில் கிடைக்காத ஒன்றையும் உற் பத்தி செய்யவேண்டும். அதுதான் திறமை.

இந்த நேரத்தில் சற்றே உணர்ச்சிவசமாகப் பதிலி றுத்த இவரது இலட்சிய இதயத்தை உணர்ந்தேன். எல்லாப் பயிரையும் செய்து பார்ப்பதைவிடத் தரமாக ஒரு பயிரைச் செய்தாலே போதும் என்ற கொள்கை யுடைய இவர் தொடர்ந்து திராட்சைப் பழச் செய்கை பற்றி விளக்கமாகச் சொல்ல ஆரம்பித்தார்.

**திராட்சைப்பழச் செய்கை முறை**

வெளிநாடுகளில் வேலிமுறை, குத்துச்செடி முறை, பந்தல்முறை என்று உள்ளன. அனேகமாக எங்கள் நாட்டில் பந்தல் முறைதான் வெற்றிகரமாகவும் செடி கள் நன்ருக வளரக்கூடியதாகவும் இருக்கின்றது. பந்தல் முறையில் இரண்டு கன்றுகளுக்கிடையே 10 x 20 அல்லது 12 x 24 அடி இடைவெளி விடவேண்டும்.

**நடுகை** மண்ணின் தன்மையைப் பொறுத்து சொகுசான செம் மண் தரையில் 3 அடி நீளம் 3 அடி அகலம் 3 அடி ஆழத் திற்குக் குழி வெட்ட வேண்டும். களித்தறையானல் 4 x 4 x 4 அடி குழிபறிக்க வேண்டும். மண், எரு இரண் டையும் சமமாகக் கலந்து கிடங்கை நிலமட்டத்திற்கு 6 அங்குல பதிவாக நிரவி அதற்கு மூன்று அல்லது நான்கு தடவைகள் நீர் பாய்ச்சிப் பதப்படுத்த வேண்டும். பின்னர் பதிவைத்த கன்றுகளை நடவேண்டும். கன்றுகளை நடும்போது கறையான் பாதிக்காமல் மருந்து (இதை வாய்க்கால் நீரில் கலந்து) ஊற்றிவிட வேண்டும். அனே தமாக தை, பங்குனி வரை நடுகைக் காலம்.

கன்று நாட்டியதும் 6 அடிவரை உயரத்துக்குப் பந் தல் போடவேண்டும். சாதாரணமாக பந்தல் உயரம் வரையும் ஒற்றைக் கெட்டில் வளரவிடவேண்டும். பந்தல் உயரத்திற்கு வளர்ந்ததும் ஒரு சாண் உயரத்தில் வைத்து வெட்டவேண்டும். அதிலிருந்து எவ்வளவு கூடுதலாகக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிளைகளை வரப்பண்ணுகிறோமோ அவ்வளவு அதிகமாகப் பழம் கிடைக்கும். சீராக வளர்ப்பதில்தான் அதன் வெற்றி தங்கியுள்ளது.

**பாதுகாப்பு** சாதாரணமாக ஒன்றரை வருஷத்தில் கொடி வெட்டக்கூடியதாக இருக்கும். ஆடிப் போகத்திலும் தைப் போகத்திலும் கொடி வெட்டும்போது கிருமிநாசினி தெளித்தல் வேண்டும். பயறு மாதிரிச் சிறிய வண்டுகளும் காற்றில் பரவும் பங்கசுக்களும் குருத்தை அழிக்காமல் 10 — 15 நாட்களுக்கு ஒருதடவை மருந்து தெளித்தல் வேண்டும். பூஞ்சாளை என்ற வியாதிபற்றியும் கவனமாக இருத்தல் வேண்டும்.

**உரமிடுதல்** ஒவ்வொரு கொடி வெட்டுக் காலத்திற்கும் 15 கடகம் எருவும் செயற்கை உரமும், கன்றின் வயதைப் பொறுத்து இடவேண்டும். 3 வருஷத்திற்கு மேற்பட்ட கன்ருயின் ஒரு கன்றுக்கு 7 ருத்தல் உரம் தேவைப்படும். நீர் தேங்கி நிற்கும் நிலத்தில் முந்திரிகைச் செய்கை சரி வராது.

யாழ்ப்பாணத்தில் திராட்சைச் செய்கையில் ஈடுபட ஆர்வமுள்ளவர்களுக்கு மனம் கோணுமல் தம்மாலான ஆலோசனைகளையும் கன்றுவகைகளையும் கொடுத்துதவத் தயாராக இருப்பதாக என்னிடம் தெரிவித்தார் திரு. கிருஷ்ணசாமி.

**கேள்வி** உங்களுடைய பொழுதுபோக்குகள் ஏதாவது உண்டா?

**பதில்** சாதாரணமாக பொழுதுபோக்கவே எனக்கு நேரமில்லை. சதா திராட்சைச் செடிகளுடனும் அவற்றை என்ன மாதிரிப் பேணி வளர்க்கலாம் என்ற ஆராய்ச்சிகளிலும் மூளையைச் செலவழித்து வருகிறேன் வீட்டில் பெற்றமாக் கிளி ஒன்று வளர்க்கிறேன். அழகான பூ மரங்கள் நாட்டியுள்ளேன். அழகுணர்வும், கலைரசனையும் இல்லாத வாழ்க்கையும் ஒரு வாழ்க்கையா?

இவரிடத்தில் ஆழமான அரசியல் கருத்துக்களுண்டு. பேச்சுவாக்கில் வியட்நாம் பிரச்சனைகள் பற்றிக் குறிப்பிட்டபோது இவர், 'வியட்நாமில் ஏதும் நடந்தால் எங்களுக்கு அது நியூஸ். அதே விஷயம் கொழும்பில் நடந்தால் அது அனுதாபம். எங்கள் வீட்டில் நடந்தால் செத்தவீடு' என்ருர்.

வீட்டோடேயே இருந்து ஆக்கபூர்வமான உருப்படியான வேலையைச் செய்து வரும் திரு.கிருஷ்ணசாமி அவர்களையும் அவரது அன்புள்ளத்தையும் கலை ரசனையையும் பண்பாட்டையும் சந்தித்த பெருமகிழ்வோடும் ஒரு நல்ல பணியைச் செய்தேன் என்ற மன நிறைவோடும் அவரிடமிருந்து விடைபெற்றேன். ★



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மேலுலக நாகரிகம் உண்மையா, கற்பனையா?

'சுசன்ரு'

பிற கோள்களில் அறிவினங்கள் இருக்கக்கூடுமா? அவற்றுடன் தொடர்பு கொள்ளும் பிரச்னையே இன்றைய மனித குலத்தின் மிகத் துணிகரமான முயற்சிகளின் ஒன்ருக இருந்து வருகிறது. அது குறித்து ஆர்மீனிய விஞ்ஞானப் பேரவையைச் சேர்ந்த விஞ்ஞானிகள் அடிக்கடி விவாதங்கள் நடத்துகின்றனர்.

பிற கோள்களில் உயிரினங்களோ, அறிவினங்களோ நிச்சயமாக உண்டா என்பது பற்றி நமக்கு இன்னும் தெரியாதுதான். எனினும் விஞ்ஞானிகளிடையே இது குறித்து அனுமானங்கள் பல உள்ளன. பூமிக்கு அப்பாற்பட்டு வேறு நாகரீக வாழ்வு ஏதேனும் இருந்தால், அவற்றைக் கண்டுபிடிக்கும் முறைகள் என்ன என்பதே ஆராய்ச்சியாளர்களைக் கவர்ந்துள்ள விஷயம்.

### ஸ்தூலமான நடவடிக்கைகள்

நடைமுறையில், இது குறித்து என்ன ஸ்தூலமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன?

நம் பூமியிலிருந்து மிக மிகத் தொலைவிலுள்ள சில நட்சத்திரங்களை சோவியத் ரேடியோ வானியலாய்வாளர்கள் கவனித்து வந்துள்ளனர். (மிக மிகத் தொலைவு என்ருல் 100 ஒளி ஆண்டுகள் தூரத்தில் என்று பொருள். ஒரு ஆண்டில் ஒளி எவ்வளவு தூரம் பயணம் செய்யுமோ அந்த தூரமே ஒளி ஆண்டாகும். அதாவது ஒரு ஆண்டில் ஒளி 5 லட்சத்து 88 ஆயிரம் கோடி மைல்கள் பயணம் செய்யும்.) அந்த நட்சத்திரங்கள் சூரியனை பல தன்மைகளில் ஒத்ததாக உள்ளன. அந்த நட்சத்திரங்களிலிருந்து வரும் ஒலிகளைப் பிரித்து ஆராய்ந்ததில், அவர்கள் சில சக்தி வாய்ந்த குறுகிய கதிர் வீச்சுத் துடிப்புக்களைக் கண்டு பிடித்தனர். யாரேனும் ஒரு அறிஞரின் விண்பொறி இயல் ஆய்வு நடவடிக்கையில் ஒலித் துடிப்பு போன்றிருந்தன அவை.

என்ருலும், திட்டவட்டமாக எதுவும் இதுகாறும் தெரிந்த பாடில்லை. ஆனுல் தெரிந்து கொள்வது அசாத்தியம் என்றும் கூறிவிட முடியாது. பல கோடி மைல்களுக்கு அப்பால் சமிக்கினைகளைச் செலுத்தவும், பெறவுமான புதிய கருவிகள் தற்போது கண்டுபி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டிக்கப்பட்டுள்ளன. எனவே, இதற்கான தத்துவார்த்த அடிப்படையொன்றை நாம் உருவாக்கவேண்டியது அவசியமாகிறது. வானியலாளர்களைவிட, உயிரியலாளர்கள்தான் அடிப்படைப் பிரச்னையை விடுவிக்க வேண்டி உள்ளது.

உயிர் என்றால் என்ன? தகுந்த சூழ்நிலைகள் இருப்பின் அது தோற்றுவதற்கான வாய்ப்புக்கள் எந்த அளவுக்கு உள்ளன? பூமியில் மனிதன் தோன்றியது, மிக விசேஷமான ஈடிணையற்ற ஒரு சம்பவமா? அல்லது ஒரு சாதாரணமான நிகழ்ச்சிதானா? உயிர்ப் பொருள்களின் பரிணாம வளர்ச்சி, திடீரெனத் தோன்றுவதா? அல்லது சில விதிகளுக்குக் கட்டுப்பட்டு நடைபெறுவதா?

இந்தக் கேள்விகளுக்கு விடைகாணத் தற்போது நம்மிடம் நம்பகமான விவரங்கள் ஏதுமில்லை. உயிரினங்களின் பரிணாம வளர்ச்சியில் சில கட்டங்கள் மட்டுமே விளக்கப்பட்டுள்ளன. பூமியில் முதன் முதல் உயிர்ப் பொருளின் தோற்றம் எவ்வாறு ஏற்பட்டது என்பது குறித்து முழுமையான விவரம் ஏதுமில்லை. ஆனாலும், உயிர்ப் பொருளின் தோற்றம் என்பது அசாதாரணமான பூமிக்கு மட்டுமே உரித்தான ஒன்றாக இருக்க முடியாது என்றுதான் பல விஞ்ஞானிகளும் கருதுகின்றனர். எனவே, பிற கோள்களிலும், தொலைதூர நட்சத்திரங்களிலும்கூட உயிரினங்களும், அறிவினங்களும் இருக்கக்கூடும்.

சில பொதுவான ஆனால் சரியான விஞ்ஞானக் கோட்பாடுகளை, பரிசோதனைகளின் மூலமாக நிரூபிக்கப்பட முடியாமலிருந்தும், அவை புதிய விஞ்ஞானத் துறைகளுக்கு இட்டுச் செல்லும் மூலஸ்தானங்களாக நிகழ்ந்துள்ளதற்கு விஞ்ஞான வரலாற்றில் பல ஆதாரங்கள் உள்ளன. சில வேளைகளில் அத்தகைய கோட்பாடுகளுக்கான ஆதாரங்கள், எதிர்பாராதபடி, திடீரெனக் கிடைப்பதும் உண்டு.

## நம்பிக்கை முடிவற்றது...

சந்திரப் பயணம் உயிரியலாளர்களுக்கு ஏமாற்றத்தையே தந்துள்ளது. ஏனெனில் பூமியினது இயற்கையான துணைக் கோளில் எந்தவித உயிர்ப் பொருளுமே இல்லையல்லவா? பல காலமாக, விஞ்ஞானக் கற்பனைக் கதைகளில் நடமாடி வந்த செவ்வாய்க் கோளின் அற்புத மனிதர்கள் குறித்த ஹேஷ்யங்களும் பொய்யாகி விட்டன. அப்படியானால், பிற கோள்களில் உயிரினங்களைக் கண்டுபிடிக்க முடியும் என்ற நம்பிக்கை வீண் தானா?

அவ்வாறு இப்பொழுது கூறிவிட முடியாது.

என்றேனும் ஒருநாள் திடீரென்று நாம் ரேடியோவில் 'அண்மையிலுள்ள ஒரு கோளின் மிக எளிய உயிரினங்களை ஒரு தன்னியக்க ஆய்வுக் கலம் கண்டு பிடித்துள்ளது' என்ற ஒரு செய்தியைக் கேட்கக்கூடும்: மிக எளிய நுண்ணிய உயிரினமாக இருந்தாலும், பிற கோள்களில் நாம் அதைக் கண்டு பிடித்தால். தொலைதூர நட்சத்திரங்களில் அறிவின மேதைகள் இருக்கக் கூடும் என்ற நமது அனுமானத்திற்கு ஓர் ஆதாரம் கிடைக்குமல்லவா? உயிரினங்களின் பரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ணாம வளர்ச்சிக் கோட்பாட்டில் உள்ள பல சிக்கல்களும் விடுவிக்கப்படக் கூடுமல்லவா? பரிணாம வளர்ச்சி பற்றிய சில புதிய பொதுவான கோட்பாடுகளும் உருவாக்கப்படலாம். குறிப்பிட்ட சில 'மேலுலகங்களை' விஞ்ஞானிகள் தமது ஆராய்ச்சிப் பொருளாகக்கொண்டு பணிபுரிய ஒரு வாய்ப்பும் கிடைக்கும். அப்பொழுது வெற்றி கிடைப்பதற்கான சந்தர்ப்பம் அதிகரிக்கும். அல்லது நிச்சயமாகவாவது எதையேனும் தெரிந்து கொள்ளும் வாய்ப்பு நமக்குக் கிடைக்கும். தெளிவற்ற நிலை என்ற விஞ்ஞான அறிவின் மிகப் பெரும் எதிரியை ஓரளவேனும் நாம் வெற்றி கண்டவர்களாவோம்.

அல்லது, பிறகோள்களில் உயிர்ப் பொருள்கள் இருப்பதற்கான சாத்தியக் கூறுபற்றி, வேறோரிடத்திலிருந்து ஆதரவு வரக்கூடும். எங்கேனும் ஒரு பரிசோதனைக் கூடத்திலிருந்து, அணுத் தொகுதிகளையும். மூலக்கூறுத் தொகுதிகளையும் சேர்த்து பெற்றோர்களற்ற ஒரு உயிர்ப் பொருளை விஞ்ஞானிகள் தோற்றுவித்தது பற்றிய செய்தியை நாம் கேள்விப்படக் கூடும். உயிர் இரசாயனவியலின் மகத்தான சாதனையாக அது இருக்கும். அப்படியிருந்தால், உயிரினத்தின் தோற்றம், வளர்ச்சி ஆகியவை பற்றிய முழுமையான ஞானம் நமக்கு ஏற்படலாம். அவ்வாறு ஏற்படும்போது, பிற கோள்களில் இருக்கக் கூடிய அல்லது இல்லாத இனங்களைப் பற்றிய விவரமும், விளக்கமும் நமக்குப் புலனாகக் கூடும். ★


உண்மை இலக்கிய ரசிகர்களுக்கு சில பொறுப்பான கடமைகள் உண்டு. ஈழத்து தேசிய இலக்கியம் தனக்குகந்த தகுந்த கௌரவத்தைப் பெற வேண்டும். இதைச் சாதனையாக்க முனைந்து செயலாற்றி வெற்றி பெறும் நோக்கத்துடனேயே மல்லிகை ஆரம்பிக்கப்பட்டது. இதைச் சாதிக்க விருப்பமுள்ளவர்கள் தொடர்ந்து மல்லிகையைப் படிக்கவும்.

ஆண்டுச்சந்தா 7-00
தனிப்பிரதி 50 சதம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிங்கள மூலம்: குணதாஸ லியனகே

# நிராதரவாளன்

தமிழாக்கம்: 'நீள்கரை நம்பி'

'தனபால! விநோதப் பயணம் போகிறீரா? இல்லையா?'

'ஸேர்! போக வேண்டும்'

'அப்படியானால், அந்த நான்கு ரூபாவை இன்று தர வேண்டாம். நாளைக் காலையில் தானே போவது'

'ஸேர்! நான் நாளைக் காலையிலேயே நான்கு ரூபாயை தவறாமல் கொண்டு வருகிறேன்'

'நல்லது. தனபாலாக்கு ஒரு அவகாசம் தருகிறேன். மற்றப் பிள்ளைகள் கட்டணஞ் செலுத்தி விட்டனர்' என்று ஆசிரியர் சொன்னார். விநோத யாத்திரைக்கான பணம் செலுத்த வேண்டிய காலக்கெடுவை ஆசிரியர் எனக்குமட்டும் தள்ளிவைத் தாரென்ற பூரிப்பில் இன்பம் கிளுகிளுத்தது.

பாடசாலை விட்டதும் வீடு நோக்கி விரைந்தேன் விடியுமுன், எப்படியாவது நான்கு ரூபாய் தேடித்தரும்படி அம்மாவை வேண்டினேன்.

'என் மகனே! நீ ஒரு கிழமையாகச் சொல்லிவருகிறாயே தேடித்தர முடியுமென்றால் நான் சும்மா இருப்பேனா?' அம்மா என் சிரசை வருடியவாறு கூறினாள்.

'பாடசாலைக்கு மற்றப் பிள்ளைகள் போகிறார்களே! நான் போவதில்லையா' என்ற பின் என் கண்கள் குளமாகி விட்டன. கண்ணீர் ஏனிப்படிகளாக வடிகின்றன. அம்மாவின் விழிகளிலிருந்தும் கண்ணீர் துளிகள் மெல்லக் கொட்டத் துவங்கிவிட்டன. அவள் கிழிந்த முந்தானையினால் துடைத்துக் கொள்கிறாள். இது என் சலிப்பை அதிகரிக்கச்செய்துவிட்டது.

'மகனே! உலகில் வறுமையைவிடப் பெரிதாக நினைக்க எதுதான் உள்ளது? வட்டிக் கடையில் வைத்துப் பணம் பெற உன் இடுப்பிலிருக்கும் வெள்ளிச் சரடையாவது தந்துவிடு!' அம்மா என் இடுப்புச் சரடை அவிழ்த்துக் கொண்டு வெளிக்கிட்டாள்.

உல்லாசப் பிரயாணத்திற்காகப் பணம் கிடைக்கப் போகிறதே என்ற ஓர் ஆனந்தம் என்னுள் கெம்பியெழுந்தது. கொண்டு செல்ல உடைகள்...? என் மனம் சளைக்கவில்லை. பழைய காற்சட்டைகளையும் கமீசுகளையும் கிணற்றடிக்குக் கொண்டு சென்று துவைத்துக் காயப்போட்டுள்ளேன். வெய்யில் மறையும் முன் உடைகள் முற்றாகக் காயவே இல்லை. கசுகசுப்புத் தன்மை இருந்தது. அவைகளைக் கொண்டுபோய்த் தலையணைக்குக் கீழ் வைத்தேன். முற்றத்தில் அம்மா வரும்வரை காத்திருந்தேன். அம்மா இரவு ஏழுமணிக்குப் பெருமூச்சோடு வீட்டை அடைந்தாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'அம்மா! காரியம் சாத்தியப்பட்டதுதானே! இல்லையா?'

'ஊர் முச்சூடும் நாயாட்டம் அலைக்கழிந்தேன். மூன்று ரூபாய்தான் வட்டிக் கடையில் கிடைத்தது'

என் பூரிப்பின் துரிதவேகம் மந்தகெதி அடைந்தது.

'ஏன்? அம்மாவிடம் ஒரு ரூபாய் பெறலாந்தானே!'

'அருமை மகனே! ஆமைக்கு எங்கே சிறகுகள்?' என்றபின் முன் படிக்கட்டில் அமர்ந்து, குப்பி விளக்கின் வெளிச்சத்தில் வெற்றிலைப் பையை அவிழ்த்து அதில் அமைதியாக உறங்கும் பணத்தைக் கொட்டுகிறாள்.

'இருபத்தி மூன்று சதம்'

'என் முயற்சி இனி பலிதமாகாது. குறை எவ்வளவு?'

'எழுபத்தியேழு சதம்'

'அப்பா வந்ததும் கேளு'

'அம்மா! என்னால்முடியாது அன்று கேட்டேன் இல்லையென்றுதானே விரித்தார்'

'பரவாயில்லை. இன்றும் கேளு. சில்லறைக் காசுதானே குறைவு'

அம்மாவின் வேண்டுகோளை ஏற்று அப்பா வரும்வரை காத்திருக்கிறேன். சுனையிருளைக் கிழித்துக்கொண்டு 'சாராயவாடை' என்னை எதிர்த்து வந்தது. ஆமாம்...... அப்பா மூக்கு முட்டக் குடித்துவிட்டுத்தான் வீட்டுக்கு வந்தார். தள்ளாடி வந்த அவர் மௌனமாகப் படுக்கையில் சாய்ந்தார். என்னுள் ஒரே பயப்பிராந்தி. எனினும் படுக்கை அருகில் நகர்ந்தேன்.

'அப்......பா!'

பதில் வரவேயில்லை.

'அப்பா!'

'ஏன்?'

'எனக்கு எழுபத்தேழுசதம் தருவீர்களா?'

'சனியனே! என்னிடம் இல்லாததை எப்படித் தருவேன்?' என் மூஞ்சியில் சீறிப் பாய்ந்தார். நான் அம்மா அருகில் சென்று கண்களைத் துடைத்துக் கொள்கிறேன்.

அவளை, சுமக்கமுடியாத சோகம் கவிந்துள்ளதை உணர்கிறேன்.

'அம்மா! வேலிஸ் மாமா வீட்டுக்குச் சென்றுவது எவ்வளவாகினும் கேளுங்களேன்'

'என்னால் அது முடியாது. உனக்கு இயலுமாயின் அங்கு சென்று கேளு' என்றபின்னும், அம்மா, தென்னங் கீற்றுக்கள் சிலதை பற்றவைத்துக்கொண்டு முன்னிறங்கினாள். வேலிஸ் மாமா எவருடனோ கதைத்துக் கொண்டிருந்தார். நாங்கள் படிகளில் ஏறினோம்.

'ஏன்? நீங்கள் இவ்விருட்டில் இப்பக்கம்?'

'சும்மா வந்தேன்' அம்மா சொன்னாள்.

'அப்படியா?'

தொடர்ந்து அவர், அம்மனிதர்களுடன் பேச்சுக் கச்சேரியை ஆரம்பித்தார்.

என் கண்கள் வீட்டை மேயத்துவங்கின. சற்று நேரத்துக்குள் அம்மா மாமாவை அழைத்ததும் அவர் இப்படிச் சொன்னார்.

'நானும் அப்பக்கம் வர எண்ணி இருந்தேன். அதற்குள் நீங்களே இங்கு வந்துவிட்டீர்கள். மிக்க நல்லது. நாளை மறுநாள்; என் கடைகட்டிட வேலைக்காக மண் தேவைப்படுகிறது. தோண்டி எடுக்கும் மண்ணைச் சுமந்துவர வாருங்கள்'



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'வருகிறேன்' என்று அம்மா ஈனசுரத்தில் சொன்னாள்.

மீண்டும் அம்மனிதர்களு டன் பேச ஆரம்பித்தார்.

அம்மா, மாமியின் காதருகில் வாயைக் கொண்டுபோய் 'குசுகுசுப்' பில் எழுபத்தியேழு சதம் கேட்டாள். மாமி இது பற்றி மாமாவிடம் பிரஸ்தாபித்தாள்.

'பணம் எதற்காக' வென மாமா அம்மாவிடம் கேட்டார். பள்ளிப் பிள்ளைகள் சிறிய சுற்றுலாவொன்று போகிறாகளாம். அதில் என் மகனும் போகிறான்' மாமா அம்மாவை எச்சரிக்க ஆரம்பித்தார்.

'உங்களுக்குக் கொஞ்சங் கூட மூளை இல்லையா?' இந்தச் சிறுசுகள் சொல்வதெற்கெல்லாம் நீங்கள் கூத்தாடப்போகிறீங்களா? இந்தப் பயணம் போகாவிட்டால் என்ன? எழுத வாசிக்கத் தெரியாமலா போகும்? என்னிடம் பணமில்லை. இருந்தாலும், பிள்ளையைக் கூடாத வழியில் அனுப்ப நான் தரப்போவதில்லை'

'அப்படியானால் சென்று வருகிறேன்' என்றவாறு புகை கிளம்பிக் கொண்டிருக்கும் தென னங் கிற்றுக்களைப் பிடித்துக் கொண்டு அம்மா வெளிக்கிட்டாள்.

'இதோபார்! நாளை மறு நாள் தவறாமல் வந்து கொஞ்சம் உதவு' மாமா அம்மாவுக்குச் சொன்னார்.

கண்ணீரைச் சுமந்து கொண்டு மீண்டும் வீட்டை அடைந்தோம். அமைதியாக எரியும் தென்னங் கிற்றின் வெளிச்சத்தில் எங்கள் நிழல்கள் தெரிகின்றன. அதில் எங்கள் வறுமைப் பேய் அசைகிறதோ? என்ற ஒரு பிரமை. வீட்டுக்கு வந்ததும் உறங்கினோம்.

அடுத்த நாள்— பயணம்.

'மகனே பயமில்லை' என்றாள். நான் கீழே விழுந்து புரண்டு புரண்டு அழுதேன். கிழிந்த சட்டையின் பொத்தல்களும் பெருத்து விட்டன! என் அழுகையின் வேதனைக் கனப்பைத் தாங்கவியலாத அம்மா குசினிப் பக்கமாகச் சென்று முகத்தை முந்தானைக்குள் புதைத்துக் கொண்டு விம்மி விம்மி அழுதாள். எங்கள் வீட்டுக் குட்டி நாயும் குரைக்கத் துவங்கிவிட்டது. வீடு ஏகப்பிரளயம்.

எம் வீட்டருகேயுள்ள அங்கோ ஆச்சி 'ஏன் தலைபால அழுகிறாய்' என்றாள். காரணத்தைச் சொன்னேன். 'கொஞ்சம் பொறு' என்றவாறு வெற்றிலைப் பையைக் கவிழ்த்தாள். ஐம்பதுசத, இருபத்தி ஐந்துசத, பத்துச்சத நாணயங்கள். அவற்றை என்னிடம் தந்தாள்.

'நாளை கோவிலுக்குச் செல்லத்தான் இந்தக் காசை வைத்திருந்தேன், பரவாயில்லை.

களிசான், சட்டைகள் மடித்து வைத்திருந்த இடத்திற்கு விரைந்தேன். ஈரம் இன்னமும் வற்றவில்லை. எனினும் அவற்றை அணிந்துகொண்டு பாடசாலையை நோக்கி விரைந்தேன் அப்போது பாடசாலைத் தோட்டத்திலிருந்து பெரிய பஸ் வண்டி புறப்பட்டுச் செல்வதைக் கண்டுவிட்டேன்.

'நானும் வருகிறேன்! நானும் வருகிறேன்! ஐயோ! நானும் வருகிறேன்' என்றவாறு ஓடினேன். என் கூக்குரல் அவர்கள் காதில் விழுந்தால்தானே? நான் வண்டி மறையும் வரை கண்கள் கலங்கப் பார்த்துக் கொண்டிருந்தேன். ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



திரு. எஸ். கே. நடராஜன்

# அடங்காப்பிடாரி



திரு வி. சி. பரமானந்தம்

சுண்டிக்குளி யாழ். நாடக கலாமன்றத்தின் 29-வது தயாரிப்பான 'அடங்காப்பிடாரி' இலங்கை பூராவும் 380 தடவைகளுக்கு மேலாக மேடையேற்றப்பட்டு ஒரு சாதனையை நிலைநாட்டியுள்ளது. இதன் சில பகுதிகள் 'வெண் சங்கு' திரைப்படத்திலும் இடம் பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது.

இதன் 100- வது மேடையேற்றத்தின்போது நாடக ஆசிரியரும் இருதிரிவதனமாக நடித்த வி. சி. பரமானந்தம் அவர்களுக்கு 'நாடகக் கலாமணி' என்ற பட்டமும் தங்கப் பதக்கமும் முதலியார் சி. முத்துத்தம்பி அவர்களால் சூட்டிப் பாராட்டப் பட்டது.

இந் நாடகத்தில் கந்தாயுத குழவியாக நடித்து நகைச் சுவை நடிப்பின் மூலம் நடிக உலகிலே தனக்கென்றொரு தனி முத்திரையை பதிப்பித்துக் கொண்டவரே திரு. எஸ். கே நடராஜன். இதைத் தவிர, எஸ். சிவநேசன், என். ரி குணரட்னம், வி. சி. குஞ்சிதபாதம் சி. கனகையா, வி. சி நமசிவாயம், கீதபொன்கலன், கிருஷ்ணகுமார் எம். திருநாவுக்கரசு, கவிஞர் வே. ஐயாத்துரை ஆகியோர் இந்த நாடகத்தில் பங்கு கொள்கின்றனர்.

பல்லாயிரக் கணக்கான மக்களைத் தொடர்ந்து மூன்று நான்கு மணி நேரம் கவர்ந்திழுத்துச் சிரித்து மகிழக் கூடிய நகைச்சுவை நிரம்பிய நாடகமாக இது தயாரிக்கப்பட்டுள்ளது. இதே நாடக மன்றத்தினர் சந்திரகுமார், மறைந்த வாழ்க்கை, கலைக்கோயில், வாழ்க்கைப்பலி, குற்றம் எங்கே?, மயானகாண்டம், பூதத்தம்பி, தூக்கு மேடை ஆகியவை உட்பட 28 நாடகங்களை அரங்கேற்றியுள்ளனர்.

சமூகச் சீர்கேடுகளை நகைச்சுவை மூலம் சுட்டிக்காட்ட முனைவதோடு, சமுதாய மாற்றத்திற்கான புதிய கருத்துக்களையும் ரசிகர்கள் மனதில் பதிப்பதற்கு இவர்களைப் போன்ற நாடகக் குழுவினர் முன் வருவது வரவேற்கத்தக்கது.

ஜே: எம்: இராசு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்த ஜெயகாந்தன்.....

'அரவான்'

1972-ம் ஆண்டிற்கான இந்திய சாஹித்திய அகதமியின் தமிழிலக்கியத்திற்கான பரிசை பிரபல எழுத்தாளர் த. ஜெயகாந்தனின் 'சில நேரங்களில் சில மனிதர்கள்' என்ற நாவல் பெற்ற செய்தியையும், 'சம்பந்தமில்லாத விஷயங்கள்' என்ற தலைப்பில் தீபம் ஜனவரி இதழில் அவர் கூறியுள்ள கருத்துக்களையும் ஒருங்கு சேரப் படிக்க ஏற்பட்டதன் விளைவாக, அவர் பற்றிய சிந்தனைகள் என்னளவில் அவசியப் படுத்தப் பட்டுவிட்டன.

ஜெயகாந்தன் எப்போதுமே தனது எழுத்தாலும், செயலாலும் பிரச்சனைக்குரியவராகவே இருந்து வருகிறார். அப் பிரச்சனைகள் — இலக்கியப் பிரச்சனைகள், சமுதாயப் பிரச்சனைகள் என்பனவற்றைவிட அவரின் சொந்த வாழ்வின் தனிமனிதப் பிரச்சனைகளாகவே விளங்குகின்றன. அவையும் எரியும் பிரச்சனைகளல்ல; அவற்றின் வெளிக்காட்டல்களும் அல்ல. அதற்கு மாறாக எரியும் பிரச்சனைகளைத் திசைமாற்றும் காற்றுச் சுவாலைகளாகின்றன. அவர் பிரச்சனைகளைத் திசைதிருப்புவதுடன் மட்டுமல்லாது, அப்பிரச்சனைகள் மனிதகுலத்திற்கு விதிக்கப்பட்ட நித்திய சாபம் என்ற வகையில் ஆன்மீக வாதம் என்ற போர்வையில் அவற்றை மலினப் படுத்தி மக்களை மாறாத துன்பக் கேணியில் ஆழ்த்திவிடவல்லவர்.

குதர்க்க வாதம் அவருக்குக் கைவந்த கலை. இந்தக் குதர்க்க வாதங்களுக்கு — மக்களைப் பரவசப்படுத்தும் வாதங்களுக்கு — அவர் பெற்ற கல்வியை அளித்ததே இந்த மக்கள் சமுதாயந்தான். இவ்வாறு உண்மைகளைப் புரட்டுகையில் தற்பாதுகாப்புக்காகப் பல வழிகளைக் கையாளுகின்றார். ஆகையினாற்றான்—

அவருக்குத் தனது சிறுகதைத் தொகுப்புகளுக்கும், நாவல்களுக்கும் நீண்ட தற்காப்பு முன்னுரை ஒன்றை எழுத வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படுகிறது. 'தெரிந்தே நான் தவறு செய்கிறேன். யாரும் என்னைத் திருத்த வேண்டியதில்லை' என்ற அழும்புக்குணம் கொண்ட முன்னுரைகளை வெளியிடுகின்றார்.

முரண்பாடுகளின் மொத்த உருவம் அவர்.

விபசாரிகளை அனுதாபத்துடன் நோக்குவார் ஒரு கதையில். 'என்னைப் பிறர் மனைவிகளும், இளம் பெண்களும் விரும்பி அழைக்கின்றனர்' எனப் பெண்களை மனவிபசாரிகளாக்கிக் கட்டுரை எழுதித் தன்னைக் கதாநாயக அந்தஸ்துக்கு உயர்த்திக் கொள்வார். மேலைத்தேய நாகரிகத்தைவிட கீழைத்தேசம் எவ்வளவோ உயர்ந்தது என வாதிட்டு பரமஹம்சரையும், விவேகானந்தரையும் புகழ்வார். அதேவேளையில் மேலைத் தேய நாகரிகத்தின் பிரதிபிம்பமாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆடை, அலங்காரம், நீண்ட சடை எனக் காட்சியளிப்பார். மனித குலத்தை நேசித்துக் கொண்டே, வர்க்க எதிரிகளின் பாதார விந்தங்களுக்குத் தூபம் காட்டுவார். ஆன்மீகவாதம் பேசிக்கொண்டே, ஆணவத்தின் கொடுமுடியில் சஞ்சரிப்பார்.

## 2

'ரிஷிமூலம்' என்ற கதையை ஒருமுறை தினமணிக்கதிர் பத்திரிகையில் எழுதிவந்தார். வாசகர்களின் கண்டனக் கடிதங்களுக்காக மேற்படி பத்திரிகை அக்கதையைப் பிரசுரித்ததற்காக வாசகரிடம் மன்னிப்புக் கேட்டது. அப்போது எல்லாம் ஜெயகாந்தன் வாய்மூடி மௌனியாக இருந்தார். எல்லாவற்றிற்கும் போர்க்கொடி உயர்த்தும் அவர் — ஒன்றுமே சொல்லவில்லை. ஏன் ஒரு பெருமூச்சுத்தானும் செறியவில்லை. ஆனால் 'எனக்கு ஒரு மரியாதை உண்டு. அந்த மரியாதைக்கு எந்தவிதத்திலேனும் எங்கேயேனும் பங்கம் நேர்கிறது என்று நான் உணர்ந்தால் அங்கேயுள்ள உறவை முறித்துக் கொள்வேன் (குருபீட முன்னுரை)' எனச் சொல்லும் அவர் அப்படி எதுவுமே செய்யாமல்— தனது அடுத்த நாவலை உடனடியாக அதே பத்திரிகையில் பிரசுரம் செய்தார். அந்த நாவல்தான்— சாகித்தியப் பரிசு பெற்ற — சில நேரங்களில் சில மனிதர்கள். ஆனால் அதே பத்திரிகை இந்திரா பார்த்தசாரதியின் 'திரைக்கு அப்பால்' என்ற நாவலைத் திடீரென முடித்துக்கொண்ட போது, டில்லி வெ. சாமிநாதன் 'கசடதபற' பத்திரிகையின் வாயிலாகக் கண்டனம் தெரிவித்து — எழுத்தாளனின் சுதந்திர உணர்வைப் பாதுகாக்க முயன்றபோது—

இந்த ஜெயகாந்தன் 'கசடதபற' எழுத்தாளர் கூட்டமொன்றில் பின்வருமாறு பேசினார் ... 'எனது நாவலுக்காக தினமணிக்கதிர் மன்னிப்புக் கேட்டபோது இந்த வெ. சாமிநாதன் எங்கே போய்விட்டார். இந்திரா பார்த்தசாரதியின்...... ஊம்பப் போய்விட்டாரா?' (இத்தகவல் ந. முத்துசாமி தருமசிவராமுக்கு எழுதிய கடிதத்தில் வாசிக்கப்பெற்றது) அதே ஜெயகாந்தன் '...புகாருக்கோ முறையிடலுக்கோ, ஆள் சேர்த்துக் கொண்டு ஆர்ப்பாட்டம் செய்வதற்கோ நான் வெட்கப்படுகிறேன். எனது உரிமைகளுக்காக நான் போராட வேண்டிய அவசியம் எனக்கோ பிறருக்கோ இல்லை' என்கிறார் (குருபீடம்)

'எனது உரிமைகளை எவரும் பறிக்கமுடியாது; பறிக்கவும் விடமாட்டேன்' என்று கூறும் முன்னுரையிலேயே 'என் கதைகளைக் குறைத்தோ, சிதைத்தோ வெளியிட அவர்களுக்கு உரிமையுண்டு என்பதை நான் அறிவேன்' என்வும் கூறுகிறார்.

'சுயமரியாதை' பற்றியும் ஜெயகாந்தன் சில சமயம் ஏதேதோ கூறுகிறார். அவருக்கே தாம் கூறுவது புரிகிறதோ, என்னவோ? 'அவர்கள்—பத்திரிகைக்காரர்கள் — எனக்கு எஜமானர்களும் அல்ல. நான் அவர்களிடம் உரிமைப்போர் நடாத்த வேலைசெய்யும் கூலிக்காரனல்ல. எனக்கு ஒரு மரியாதையுண்டு. (குருபீடம்) 'எனவே எதையோ உளறி எப்படியோ சுயமரியாதையை இழக்காமல் இங்கு வாழுகிறேன்' 'உண்மையான புரட்சிகரம் தன்மானம் உரிமைப் போராட்டம் என்பது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லாம் கருத்தில் தானே ஒழிய போடுகிற கூப்பாட்டில் இல்லை' என்கிறார். (தீபம்) முன்பொரு முறை தனது எழுத்து சமுதாயத்தை உயர்த்துவதற்கு என்ன ஜாக்கியா எனக் கேட்டவர். 'இந்தச் சமூகம் இப்படியே இருக்கப் பயன்படுவது என்னுடைய நோக்கமல்ல' (குருபீடம்) 'என்ன எழுதுவது, அதனை எப்படி எழுதுவது என்று தீர்மானிக்கிற உரிமையை வியாபார நோக்கங்களுக்காக இழந்துவிடுவது — அதுவும் குற்றமில்லைத் தான்.

என் வாழ்க்கையின் நிர்ப்பந்தம் காரணமாகவே நான் எழுதுகிறேன். (தீபம்), என்று இவர் கூறும் பொழுது இவருடைய சமூக உறவுகளையும், சமூகப் பிரச்சனைகளிலிருந்து இவர் தப்பித்துவிட முனைவதையும் நன்குணர முடிகிறது.

## 3

இத்தன்மை வாய்ந்த ஜெயகாந்தனின் நூலின் பரிசுக்கு யாரும் அதிகம் ஆட்சேபனை எழுப்பவில்லை என்றால், அவர் ஆரம்பகாலத்தில் தமிழிலக்கிய உலகிற்கு அளித்த நல் அறுவடைகளை மனதில்கொண்டுதான் ஆகவே, இப்பரிசு தனது எழுத்துலகக் கொள்கைக்குக் கிடைத்த வரவேற்பு என ஜெயகாந்தன் கருதினால், அது முழுத்தவறே.

'சில நேரங்களில் சில மனிதர்கள்' நாவல் பிராமண சமுதாயத்தை அடிப்படையாகக் கொண்டு, சில பிரச்சனைகளை விமர்சனம் செய்ய முற்பட்டு அச் சமுதாயத்தையே அனுதாபமற்ற முறையில் ஏளனப்படுத்திவிட்டது. அதனால்தான் தி. மு. க. அரசின் பலத்த சிபாரிசு அதற்குக் கிட்டியிருக்கவேண்டும்' என்று ஒரு இலக்கிய நண்பர் இதுபற்றிக் குறிப்பிடும்பொழுது கூறினார்.

எவ்வாறாயினும் த. ஜெயகாந்தன் தனது எழுத்துலக சிந்தனைபற்றி சுயதரிசனம் செய்வதும், புனர்வாழ்வையே மேற்கொள்ளுவதும் கால அவசியமாகும். ★


உங்கள் உணவை மேலும் சுவையூட்ட

தினசரி பாவியுங்கள்

# கேரள

# கே. எம். பப்படம்

எங்கும் கிடைக்கும்

கேரள தயாரிப்பாளர்கள்

மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடைசிப் பக்கம்

டொமினிக் ஜீவா

சமீப காலமாகத் தமிழகத்திலிருந்து பல பெயர்களுடன் — கசடதபற, வண்ணங்கள். இன்று, பிரச்சினை, அஃக், சதங்கை, வானம்பாடி, ஞானரதம், கணையாழி, ஆகியனவும் இன்னும் வேறு சில இலக்கியச் சஞ்சிகைகளும் வெளிவருகின்றன.

இவைகளில் சில, 'இலக்கியத்தைப் புனர் நிர்மாணம் செய்து விடுவோம்' என்ற கோஷத்தைத் தாங்கியும் வேறு சில, உண்மை யாக இலக்கியப் பிரக்ஞையுடன் வெளிவருவதும் கவனிக்கத்தக்கது.

இப்படி வெளிவரும் சிறிய இலக்கியச் சஞ்சிகைகளில் கணிச மானவை எனது பார்வைக்கும் கிடைக்கப் பெற்றன.

இவை பற்றி, இவைகளின் இலக்கியக் கோட்பாடு, அல்லது கோட்பாடற்ற தன்மை, நோக்கம், போக்கு, இலக்கியக் கருத் தோட்டம், இவைகளின் அடிநாதமாக விளங்கும் உள்ளீடுகளும் கருத்துக்களும் அபிப்பிராயங்களும் பற்றி நான் பரவலாகப் பல இலக்கியச் சுவைஞர்களுடன் கருத்துப் பறிமாறல் செய்துகொண்டு வருகிறேன்.

'ஞானரதம்' முதிர்ந்த எழுத்தாளர் க. நா. சு. அவர்களி னது 60-வது பிறந்த நாளைக் கௌரவிப்பதற்காக மலரொன்றைப் போட்டுள்ளது. இது வரவேற்கத்தக்கது.

க. நா. சு. பற்றி ஒரு விரிவான விமர்சனக் கட்டுரையை— எந்தவிதத் தாக்கங்களும் எம்மைப் பீடிக்காத கடல் கடந்த தொலைவிலுள்ள நாங்கள் அவரைப்பற்றி என்ன கருதுகின்றோம் என்பது பற்றிய ஆய்வுரையை மல்லிகையில் பிரசுரிக்க வேண்டும் என்பது எண்ணம்.

பின்னர் பார்ப்போம்.

தேங்கிப் போன, சலசலப்பற்ற, விரக்தியுற்ற ஒரு பாரம்ப ரிய இலக்கியப் பரம்பரையின் பிரக்ஞைப் பெருமூச்சுக்களாக இருக் கலாமோ இச் சஞ்சிகைகள் என்றொரு எண்ணமும் என் மனதில் ஏற்படுவதுண்டு. சிலவற்றினஉள்ளடக்கத்தைக் கவனிக்கும் போது மக்கள் தொடர்பற்றுத் தனிமைப்படுத்தப்பட்ட ஒரு சிலர் தங்க ளது மன விகாரங்களை வெளிப்படுத்த இவைகளை ஒரு சாதனமா கப் பயன்படுத்த முனைகின்றார்களோ என ஐயுறவேண்டியுள்ளது.

இலக்கிய ஆரோக்கியத்திற்குப் போராடுகின்றோம் எனச் சொல் பவர்களின் மன ஆரோக்கியத்தில் சந்தேகம் ஏற்படக் கூடியதான கருத்துக்களைச் சில சஞ்சிகைகள் உண்மையாகக் கொண்டுள்ளன.

எது எப்படியானாலும் தமிழகத்து இலக்கிய வட்டாரத்தில் பரபரப்பூட்டி வெளிவரும் இந்த இளம் சிந்தனையாளர்களின் கருத்துக்களை மிகநுட்பமாக அவதானித்துவருவது நல்லது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆலய உற்சவங்கள், திருமணவைபங்கள், கலை இலக்கிய நிகழ்ச்சிகள் மற்றும் மங்களவைபவங்கள் யாவற்றிற்கும்

இலங்கை வானொலி புகழ் நாதஸ்வர வித்துவான்கள்

# நெல்லியடி, கே. பி. சத்தியமூர்த்தி

## (சகோதரர்கள்)



கோஷ்டியினரைத்
தொடர்புகொள்ளுங்கள்

விபரங்களுக்கு :-

★ கே. பரமு
முருகன் கோவில் வீதி,
நெல்லியடி, கரவெட்டி

★ க. சுப்பிரமணியம்
சாரண ஆசிரியர்
நெல்லியடி, கரவெட்டி.

ஈழத்து இசைக் கலைஞர்களை ஆதரியுங்கள்

---

விற்பனையாகிறது !

3ம் திருத்திய பதிப்பு

| | |
|---|---|
| பாகம் I | 5-50 |
| பாகம் II | 5-50 |

வே. க. நடராசா எழுதிய

# பண்டைய ஈழம்

(ஆதிகால இலங்கை வரலாறு)

விற்பனை:
ஸ்ரீலங்கா புத்தகசாலை,
234, கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.

மற்றும்

பிரபல புத்தகசாலைகளிலும் கிடைக்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**Mallikai** *Registered as a Newspaper in Sri Lanka* FEBRUARY 1973

அதிசயம் ஆனால் உண்மை

# ரிஷி கருணைக் கிழங்கு லேகியம்.

மூலவியாதியையும் மலச்சிக்கலையும் இலகுவான முறையில் விரைவில் குணமளிக்கிறது.



அஜீரணம்
மூல வியாதி
வாதம்
வயிற்று வலி
எப்படி



ஆனந்தம் அளிக்கும் தேக ஆரோக்கியம் தருகிறது

ரிஷி லேகியம்

இதிலுள்ள மேலாக்கான மூலிகைகள் பித்த மயக்கம் கைகால் அசதி, சொறி சிரங்கு, வயிற்று உப்பிசம், வயிற்றுவலி, வாய்வு, ஆசனக் கடுப்பு, உள்மூலம், வெளி மூலம், இரத்தமூலம் இவற்றைக் குணப்படுத்துவதுடன் மலச் சிக்கலை அகற்றி இலகுவான முறையில் அன்றாடம் மலத்தை கழிக்கவும் செய்கிறது. காலையிலும் இரவிலும் ஆகாரத்திற்கு பின் நெல்லிக்காய் அளவு வாயிலிட்டு பால் அல்லது நீர் அருந்தவும். பத்தியமில்லை.
ஆண் பெண் இருபாலாரும் சாப்பிடலாம்

சிறியது விலை ரூ. 4.50 பெரியது விலை ரூ. 8.50

எல்லா உணவுப் பண்டங்களையும் ஜீரணிக்கச் செய்கிறது

ரிஷி லேகியம்

## ஞானசுந்தர வைத்தியசாலை

187, செட்டியார் தெரு. கொழும்பு-11

72 வருடம் வைத்திய உலகில் உண்மையான முறையிலான நேர்மையான வைத்திய சேவை புரிவது எங்கள் ஸ்தாபனமே. ஆலோசனை இலவசம்.

SRIKANTH

234 A, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம் முகவரியில் வசிப்பவரும், ஆசிரியரும் வெளியிடுபவருமான டொமினிக் ஜீவா அவர்களால் மல்லிகை சாதனங்களுடன் யாழ்ப்பாணம் ஸ்ரீலங்கா அச்சகத்திலும் அட்டை வ. மா. கூட்டுறவு அச்சக நூற்பதிப்புச் சங்கத்திலும் அச்சிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org